தென்றல்

ஆசிரியர்:— கண்ணதாசன்.

உள்நாடு (இலங்கை உட்பட) விலை இரண்டணு | வெளிநாடு மூன்றணு | அலுவலகம்: 'தென்றல்' சென்னை-6

மலர் · 2 | சென்னை | 27—12—55 | செவ்வாய்க்கிழமை | இதழ் 28

புயற் பகுதியில் பொதுச் செயலாளர்

கடும் புயலாலும் பெரு மழையாலும் கட்டுக் கடங்கா வெள்ளத்தாலும் தாக்கப்பட்டுப் பேரிழப்புக்கும் பெரு அழிவுக்கும் ஆளான தமிழகப்
குதிகளை நமது பொதுச் செயலாளர் நெடுஞ்செழியன் அவர்கள் நேரில் சென்று பார்வையிட்டார்கள். மதுரை மாவட்டச் செயலாளர் எஸ். முத்து
அவர்களும் தஞ்சை மாவட்டச் செயலாளர் என். எஸ். இளங்கோ அவர்களும் உடன் சென்றார்கள்.
மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த தனியாமங்கலத்தில் புயலால்பாதிக்கப்பட்ட இடத்தைப் பார்வை இட்ட போது எடுத்த படம் இது :

—போட்டோ : தென்றல்-[illegible]

புகையும் நெஞ்சின் செய்திகள் கேட்கிறார்

சிங்காரி

தமிழ்ப்பித்தன்

பூங்குழலி அவ்வூர் இசை வாணரின் ஏகப்புதல்வி, அந்தச் சிங்காரியின் பேரழகு, அவள் தந்தையிடம் இசைகற்ற இளைஞர்களின் இதயத்தைக் கசக்கி வேடிக்கை பார்த்தது. அந்த வேடிக்கையின் விளைவு... ?

அந்தி மயங்கிய நேரம்! ஆற்றங்கரையின் அருகிலே அமர்ந்துகொண்டு 'என்ன வாழ்வென் வாழ்வு - அந்தப் போட்டி தந்த தாழ்வு' என்று பாடிக்கொண்டிருந்தார் பாதலிங்க பாகவதர். அவரது பாட்டிலே ஏக்கம் எதிரொலித்தது. தாங்கமுடியாத துக்கம் பின்னப்பட்டிருந்தது. வாழ்ந்த நாட்கள் தீர்ந்துவிட்டன, இனி வீழும் நாள் வந்துவிட்டது. அதுவும் இன்றோ நாளையோ என்றிருக்கிறது. இருந்தாலும் அவர் உள்ளம் அவரது வாலிபப் பருவத்தில் நடந்த நிகழ்ச்சியை எண்ணி எண்ணித் தினமும் கவலைப்படுகிறது. பாதலிங்கத்துடன் பழகுகின்ற நண்பர்கள் பலர். ஆனாலும் அவர்களில் ஒருவராவது அவருடைய வாழ்க்கையின் முழு விபரத்தையும் அறிந்துகொள்ள முடியவில்லை. அந்த அளவிற்கு அவர் ஒரு புதிராகவே இருந்தார்.

வாழ்க்கையைப் பற்றிப் பலர் பல விதமாகச் சொல்வதுண்டு. பாதலிங்கத்தைக் கேட்டால், வாழ்க்கை ஒரு பஞ்சு மூடிய பள்ளம் என்றுதான் சொல்வார். நண்பர்களுடன் பேசுகையில் உலகப் பற்றற்றவர்போல் காட்டிக்கொள்வார். ஆனால், தன் உள்ளத்தை ஏமாற்ற முடியாததால் சிற்சில சமயங்களில் ஆற்றங்கரைக்கு வந்து தனது ஆற்றொணாத் துயரத்தை ஆற்றிச்செல்ல முனைவார்.

அவ்வாறுதான் அன்றும் தனது துயரத்தைத் தீர்த்துக்கொள்ளப் பாட்டுப் பாடிக்கொண்டிருந்தார். அப்போது எதிர்பாராமல் அவரது எழுத்தாள நண்பர் ஏகாம்பரம் அங்குவந்து சேர்ந்தார். சோகப் பாட்டுப் பாடிக்கொண்டிருக்கும் பாகவதரைக் கண்டுவிட்டார், ஏகாம்பரம். நண்பர்க்கெல்லாம் ஆறுதலும் அறிவுரையும் அதிக அளவிலே சொல்லி, அவர்களுக்கெல்லாம் ஆசான்போல விளங்கும் பாகவதர் தாமே அழுது புலம்பிக்கொண்டிருப்பதை முதலில் ஏகாம்பரம் நம்பவேயில்லை. ஏகாம்பரத்தைக் கண்ட பாதலிங்கம் தன் கண்ணீரை மாற்ற முயன்றார். பலன் இல்லை. ஏகாம்பரம் பாகவதரின் மனவருத்தத்திற்குரிய காரணத்தைத் தெரிந்துகொள்ள ஆசைப்பட்டார். பாதலிங்கம் முதலில் தயங்கினார். பின்னர் தன் மன ஆறுதலுக்காகவே தனது வரலாற்றைச் சொன்னார். ஏகாம்பரமும் கேட்கலானார்.

★

"இன்று தரை மட்டமாக இருக்கும் இந்த இடம் முப்பது ஆண்டுகளுக்கு முன்னர் இசைப்பள்ளிக்கூடமாக விளங்கியது. இசையை நாட்டில் பரப்பவேண்டும் என்ற நல்லெண்ணத்தோடு, எந்தவித உதவியையும் எதிர்பாராது இந்தப் பள்ளியை நடத்திவந்தார் ஓர் இசைவாணர். அவரது இசை நகரமக்களையெல்லாம் இசைவித்தது. மோகனத்திலே அவர் பாடினால் மோகனமாகத்தானிருக்கும். அவரது இசையிலே மயங்கியவர்களில் நானும் ஒருவன்.

எனக்கு அப்போது வயது இருபதிருக்கும். நானும் இசைப்பள்ளியில் சேர்ந்து இசைகற்க விரும்பினேன். இசைவாணரை அணுகினேன். அவர் எனக்கு வயது அதிகமாகிவிட்டது என்று சொன்னார். நான் மன்றாடினேன். என்னுடைய ஆர்வத்தின் காரணமாக என்னைச் சேர்த்துக்கொண்டார். நான் மன இசைவுடன் இசையைக் கற்று வந்தேன். பாதலிங்கத்தின் மகள் பூங்குழலியும் என்னுடன்தான் இசை கற்று வந்தாள். அவளது பேச்சே இசையாக இருக்கும். அந்த வடிவழகியின் முறுவல் எனக்கு மோகனமாகக் கேட்டது. அவள் கண் பார்வை கல்யாணி ராக ஆலாபனை செய்யும். அந்த வண்ண மயிலின் கூந்தல் குந்தலவராளியை இசைக்கும். அந்தப் பேசும் விழிப்பாவை என் உள்ளத்தின் இசையரங்கில் ஒப்பற்ற காதல் கீதம் இசைப்பாள். அந்த இசையரசியின் அன்புப் பார்வைக்காக நான் ஏங்கி நின்றேன். ஆனால், அந்த வாலைக்குமரி என் ஏக்கத்தைப் புரிந்துகொள்ளவில்லை.

சில ஆண்டுகள் சென்றன. என்னுடன் இசை கற்ற மாணவர்களில் இனியனும் என்னை யொட்டியே சிறந்துவிளங்கினான். இசையாசிரியர் எங்கள் இருவருக்கும் தனியே இசை கற்றுத்தருவார். பூங்குழலி அடிக்கடி நாங்கள் இருக்கும் இடத்திற்கு வருவாள். அப்போதெல்லாம் அவளுடைய கண்கள் என்னை நோக்குவதில்லை. அதற்குப் பதிலாக இனியனையே நோக்கின. இதனால் என் உள்ளத்தில் பொறாமைத் தீ வளர்ந்தது. நான் எவ்வளவோ அன்பு செலுத்தியும் என்னைக் காதலிக்காமல் அந்த இனியனை அவள் காதலிப்பதை அறிந்தபோது நான் பட்டதுன்பம்-நான் சிந்திய கண்ணீர் அதிகம்! எனது ஏமாற்றம்-தோல்வி என் உள்ளத்திலே தீராப் பகையை வளர்த்தது. அதுமுதல் நான் இனியனிடம் வெறுப்புக்கொண்டேன்.

இருவரும் இரு துருவங்களாக இருந்துகொண்டிருந்தபோது ஒரு நாள்.........

இதே ஆற்றங்கரையை ஒட்டிய தோப்புக்கு நான் சென்றுகொண்டிருந்தேன். இனியன் எனக்கு முன்னால் சென்றுகொண்டிருந்தான். அவனுக்கு முன்னால் பூங்குழலி போய்க்கொண்டிருந்தாள்.

தோப்பிலே ஒரு பாறை - அப்பாறையின்மீது அந்தத் தோகை சென்றமர்ந்தாள். அவளைப் பின்பற்றி இனியன் சென்றான் அவன் பூங்குழலியின் அருகில் சென்றபோது நான் அங்கு போய்ச் சேர்ந்தேன்.

நெடு நாட்களாகவே, பூங்குழலிக்கு என் உள்ளத்தைத் திறந்து காட்டி, என்னைக் காதலிக்கிறாளா இல்லையா என்பதை நேரடியாகத் தெரிந்துகொள்ள விரும்பிய எனக்கு, அன்று நல்ல வாய்ப்புக் கிட்டியது. துணிந்து கேட்டுவிட்டேன் அவளது உள்ளத்தில் எனக்கு இடம் உண்டா என்று. அவளுடைய மறுமொழியை எதிர்பார்த்து நின்றேன்.

"நான் ஒரு போட்டி வைக்கிறேன். கானடாவில் நீங்கள் இருவரும் தனித்தனியே பாடவேண்டும். உங்கள் இருவரில் யார் நன்றாகப் பாடுகிறீர்களோ அவரைத்தான் நான் மணம் செய்துகொள்வேன்"- அவள் பதிலிறுத்தாள்.

அவ்வளவுதான்! நான் போட்டிக்குத் தயாரானேன். பல ஆண்டுகளாக நான் கற்றுவந்த இசை-பண்போடும் விருப்போடும் கற்றுவந்த இசை, என்னைப் பாதுகாக்கும் என்ற நம்பிக்கையோடு நான் பாடினேன். பாடிக்கொண்டே பூங்குழலியின் முகத்தைப் பார்த்தேன். அவளது முகத்தில் எந்தவித உணர்வும் இல்லை.

நான் பாடி முடித்தேன். அடுத்து இனியன் பாடினான். அவன் பாட ஆரம்பிக்கும்போதே பூங்குழலி பூரித்தாள். அவன் பாடி முடித்தவுடன் கைதட்டி ஆரவாரம் செய்தாள். அவளுடைய முடிவு என்ன என்பதை அறியக் காத்துகொண்டிருந்த நான் ஏமாந்தேன். அவளது தீர்ப்பு என் வாழ்வைத் தூளாக்கிய தீர்ப்பு! "இனியன்தான் போட்டியில் வெற்றிபெற்றார். அதனால் அவரைத்தான் நிபந்தனைப்படி நான் மணம் செய்துகொள்வேன்" என்று சொன்னாள்.

என் உயிரே போய்விடும்போல் இருந்தது. என்ன செய்வது என்றே எனக்குப் புரியவில்லை. அங்கிருந்து வேக வேகமாக ஓடினேன், இசைப்பள்ளியை நோக்கி. மனப்போராட்டத்தோடு மாலை நேரத்தைக் கழித்தேன்.

இரவு வந்தது. இந்த ஞாலத்தை இருளாக்கியது! எல்லோரும் நிம்மதியாகத் தூங்கினர். அந்நேரத்திலே என் உள்ளம் மட்டும் ஆறுதலற்று வாடியது. மனம் பேதலித்தது. என் உள்ளே ஒரு முடிவு செய்துகொண்டேன். முடிவைச் செயலாக்க முதலில் பயந்தேன். பொறாமை என்னை ஊக்குவித்தது. படுத்திருந்த நான் எழுந்து சென்றேன். என் நெஞ்சு பதைத்தது. ஆனாலும் தொடர்ந்து சென்றேன். தயக்கமும் என்னைத் தொடர்ந்தது. இறுதியில் துணிந்துவிட்டேன். இசைப்பள்ளியின் கூரையில் தீ வைத்துவிட்டேன். தீ கொழுந்துவிட்டு எரிந்தது. எல்லோரும் அலறி எழுந்தனர். நானும் சேர்ந்துகொண்டு அவர்களுடன் பதறினேன்: ஓடினேன். எல்லோரும் வெளியே தப்பித்து ஓடிவிட்டனர். எந்தவித உயிர்ச்சேதமும் கிடையாது. கூரைமட்டும் சாம்பலாகியது. ஆனால் யாருக்கும் தெரியாது நான்தான் தீ வைத்தேனென்று! இனியனும் பூங்குழலியும் தீயில் மாண்டு மடிந்துவிடுவார்கள் என்று எண்ணித்தான் அந்தப் பாதகச் செயலைச் செய்தேன். அவர்கள் தப்பித்து நல்வாழ்வு வாழ்கின்றார்கள். நான்தான் நிம்மதியில்லாமல் வாடுகிறேன். இளங்காதலர்கள் வாழ்வைப் போக்க முற்பட்ட குற்றத்திற்குக் கழுவாயாக, நான் மணம் செய்துகொள்ளாமலே காலத்தைக் கழித்துவிட்டேன். போட்டியில் ஏற்பட்ட தோல்வி, அதனால் ஏற்பட்ட பொறாமை; பொறாமையால் விளைந்த புத்தி கெட்ட செயல் இவை அனைத்தும் என் மனதைத் துன்புறுத்தின. அந்தத் துன்பம் தாங்கமுடியவில்லை. என் கடைசி மூச்சுக்குள் என் வாழ்வின் உண்மையைச் சொல்லிவிடவேண்டும் என்று நினைத்தேன்."

இவ்வாறு சொல்லிவிட்டு, தன் மடியில் இருந்த பொருள் ஒன்றை எடுத்து வாயில் போட்டுக்கொண்டு தொடர்ந்து சொன்னார் பாதலிங்கம்.

"இந்த உண்மையைச் சொன்னதனால் இப்போது எனக்கு ஒருவகை நிம்மதி தோன்றுகிறது. இனிமேல் நான்..."-அவரது பேச்சு தடைப்பட்டது.

தட்டுத் தடுமாறி "இனிமேல் நான் நிம்மதியாகச் சாவேன்" என்று சொல்லிமுடித்தார். அவரது வாயிலிருந்து ரத்தம் வந்துகொண்டிருந்தது. மூச்சு வெளியே வரத் திண்டாடிற்று. ஆவி பிரிந்தது. தலைசாய்ந்தது. உடம்பெல்லாம் நீலம் பாய்ந்துவிட்டது. அப்போது தான் தெரிந்தது அவர் தன் வாயில் பாஷாணம் போட்டிருந்தார் என்று! தான் செய்த பாதகச் செயலை எண்ணி எண்ணி மனம் வருந்தி, தனது வாழ்வைப் பாழாக்கிக்கொண்டதோடு அமையாமல் உயிரையும் போக்கிக்கொண்டார் பாதலிங்க பாகவதர், விஷம் உட்கொண்டதன் மூலம்! பாதலிங்கத்தின் பரிதாப முடிவைக் கண்ட அவரது நண்பர் ஏகாம்பரம் கண்ணீர் உகுத்தார்.

★

குற்றம் யார் மேல் ?

மாண்டி கார்லோ மலைமேலே கோல்ஃப் பந்தாட்டத்தில் ஈடுபட்டார் ஒருவர். அவர் பந்தை அடிக்கும் குறி அடிக்கடி தப்பிப் போகும். அதைத் தம் பிசகு என்று நினைக்கமாட்டார்; அவன் சிரித்தான், இவன் தும்மினான் என்று யாரையாவது குற்றம் கூறிக்கொண்டே யிருப்பார்.

ஒரு நாள் அவர் குறி மகா மோசமாகப் போய்விட்டது. பந்து அடியோடு தப்பிப் போயிற்று. ஆத்திரத்தோடு சுற்றுமுற்றும் கண்ணோட்டம் விட்டுத் தம் தோழர்களைப் பார்த்தார். அவர்களில் யாரும் மூச்சுப் பறியவில்லை. எவரையும் குற்றங் கூற வழியில்லை. கையைத் தூக்கி அலைபோல் அசைத்தார்; தூரத்தில் 2,000 அடி கீழே பாய்மரச் சீலையை அசைத்தபடி மீன் பிடிக்கும் பல படகுகள் சஞ்சரித்தது புள்ளி புள்ளியாகத் தெரிந்தது.

பந்தாட்டக்காரர், "அதோ பாருங்கள்: ஒரு மனிதன் எப்படித்தான் பந்தடிக்க முடியும், இப்படிப் பல கப்பல்கள் முன்னும் பின்னுமாக ஆடியாடி அசைந்து கொண்டிருந்தால்?" என்று ஓலமிட்டார்.

—'காரொனெட்'

> "போற்றுபவர் போற்றட்டும், புழுதி வாரித்
> தூற்றுபவர் தூற்றட்டும்; தொடர்ந்து செல்வேன்
> ஏற்றதொரு கருத்தை என(து) உள்ளம் என்றால்
> எடுத்துரைப்பேன் எவர்வரினும் நில்லேன்; அஞ்சேன் !"

எண்ணம்

மலர் 2 | 27-12-55 | இதழ் 28

பாரத் மாதாக்கீ... ஜே !

கோகில கான இசைவாணியின் சிபாரிசினால் இந்தியத்துணைக் கண்டக் குடியரசுத் தலைவரவர்கள் அனைத்திந்திய வானொலி நிலையத்தில் பல புதிய பதவிகளை பார்ப்பனர்களுக்காகவே நியமித்துள்ளாராம். 'கர்நாடக சங்கீத கண்ட்ரோலர்' என்பது பதவியின் பெயராம். என்ன எழவைக் கண்ட்ரோல் பண்ணப்போகிறார்களோ தெரியவில்லை கண்ட்ரோலர்கள், தங்கள் தங்கள் சொந்த ஊர்களிலேயே இருந்துகொள்ளலாமாம் சம்பளம் மாதா மாதம் வீடுதேடி வந்துவிடுமாம். ஆட்கள் யார், யார்? சம்பளம் எவ்வளவு? படியுங்கள்:—

டெல்லி : செம்மங்குடி சீனிவாச அய்யர்—சம்பளம் ரூ. 1200

சென்னை : ஜி. என் பாலசுப்பிரமணிய அய்யர்—சம்பளம் ரூ. 1000

மைசூர் : துரைசாமி அய்யங்கார்—சம்பளம் ரூ. 600

விஜயவாடா: சீனிவாச ராவ்—சம்பளம் ரூ 600

திருச்சி : எஸ் வி. பார்த்தசாரதி அய்யங்கார்—சம்பளம் ரூ. 600

எப்படி? இதைச் சொன்னவர் யார் தெரியுமா? மிகப் பெரிய சங்கீத வித்வான். அனைத்திந்தியப் புகழ்பெற்றவர் பெரியார் பாணியில் சொன்னால் பச்சைத்தமிழர். தமிழரான காரணத்தாலேயே அனைத்திந்திய வானொலியால் கவனிக்கப்படாமலிருப்பவர் பதவி ஆசைகாட்டி பார்ப்பனர்கள் தங்கள் அடிமையாக்கிக்கொள்ள முயற்சித்தபோது அந்த வலையில் விழாமல் தப்பியவர் தமிழர்கள் எல்லோரும் அவரை அறிவார்கள். அவர் வயிறெரிந்து வீடுதேடி வந்து இந்த அநியாயத்தைச் சொன்னார்.

எங்கே? போடுங்கள்!

பாரத்மாதாக்கீ.........ஜே!

இப்படிப் போட்டுக்கொண்டே இருங்கள். பாரதமாதாவுக்கு கருமாதி நடக்கும் வரை மூச்சுவிடாமல் போடுங்கள்.

அட தமிழா! நீயும் சேர்ந்து 'ஜே' போடு! தன் சவக்குழியைத் தானே தோண்டிக்கொள்வதில் தமிழனுக்கு நிகர் வேறு யார்?

—கண்ணதாசன்.

★ ★ ★

திருத்துறைப்பூண்டி-அதிராம்பட்டினம் வழியில் புயலால் வேரோடு சாய்ந்த ஆலமரம்.
இடமிருந்து: பாபு, இளங்கோ, பொதுச்செயலாளர்.
போட்டோ: தென்றல்-திரை சாமுவேல்.

சுவைக் கரும்பு

காந்தள் மணக்கும் கவின்வரைசேர் நன்னாட்டுப்
பூந்தண் பொதும்பரிடை ஆய முடனாடும்
மங்கைஎன் னுள்ளே வரையாத ஓவியமாய்த்
தங்கினா ளாகத் தழைத்துவரும் காதல்
வளர்பிறையாய் அன்பு மலர்மொட்டாய் நாளும்
விளங்கு புகழ்சான்ற மேதகவு தானுடைத்தே!

ஆகையினால்,

பூஞ்சோலை வாயந்தப் பூங்கொடியைக் காண்பதற்கு
வாஞ்சை யுடன்சென்றே மற்றங்குப்-பாங்கியரோ(டு)
ஆடுவாள் கண்டும் அமைதி யுறுதவள்பின்
ஓடும் உழலும்என் நெஞ்சு.

யானோக்கத் தான்நோக்கா(து) யானவளை நோக்காக்கால்
தான்நோக்கும் நோக்கம் தனைக்கண்டும்—மான்நோக்கி
எண்ணம் தெளியா(து) இருநாட் கழிந்தேனே
புண்ணம்பு பட்டதைப் போல்.

துஞ்சும் உளத்தின் துயர்தீர்க்க மாதவளைத்
தஞ்சம் புகுவதெனச் சார்ந்தேனை—நெஞ்சொத்து
மஞ்சுசூழ் சோலை வருதலொழிந்தனளாய்
வஞ்சித்தாள் வஞ்சி மகள்.

என்னையோ,

காதற் குறிப்பெனக்குக் காட்டினாள் போலின்று
சாத லளித் தகன்றாள்.

எனவாங்(கு)

ஐயுற்ற உள்ளம் அலைவுற்று வாடிடத்
தையலை எண்ணித் தணிப்பரிய—மையலால்
எதுவும் செயலாற்றா தேகநாள் ஓரிற்
கதவருகே நின்றாள் கரும்பு.

அது கண்டு

பொழிலகத்துப் பூங்கொடி கதவைத் தழுவி
எழிலொழுக நின்ற திதுவென்கொல் மாயம்!
சோலைப் பசுங்கிளி மனைவாயில் நின்று
கோலஞ் செய்கின்ற திதுவென்கொல் மாயம்!
ஒன்றிய உள்ளத்தி லோங்கி எழுங்காதல்
நின்றது போல்நின்ற திதுவென்கொல் மாயம்!

எனவாங்கு

எண்ணியவ் வில்லத் தெதிர்நின்றேன் வாவெனக்
கண்ணிற் குறிகாட்டினாள்.

ஆங்குப்போய்த்

தெரியிழாய்! நின்னுடைத் தாதையுந் தாயரும்
வரின்நமக்கு மாளாப் பழிதலை வந்தெய்தும்
விருப்புள தாயின்நின் உள்ள முரைத்திடில்
உரியன செய்வேன்மன் யான்.

என்றேனைக்

கண்கடை நோக்கிக் கவிழ்ந்து நிலம்நோக்கி
நுண்ணிடை ஒசிய நடந்தனள் சென்று
நின்றாள் திரும்பினாள் நெஞ்சுறை காதலால்
புனனகை பூத்துப் பொலிந்ததூஉ மன்றே!
புன்னகை யூத்துப் பொலிதலூ மாங்கே
என்னுளங் கண்டு மகிழ்ந்ததூஉ மன்றே!
அரும்பும் மகிழ்ச்சி மலர,அவ் வாயிழை
சுரும்பு விழியைப் புதைத்தன ளல்லனோ!
சுரும்பு விழியைப் புதைத்திடும் தோள்களை
விரும்பித் தழுவியே மேவின னல்லனே!
அன்பின் பெருக்கா லகமொத்த லின்றியே
மன்பதை தாங்கிடும் வாழ்வுமோர் வாழ்வாமோ!

வாழ்வேனேல்,

நின்னோடே வாழ்வேன் மன்யான்
என்வாழ்வும், நும்வாழ்வா லாமேயினி

எனவாங்குத்

தளரா உறுதியொடு வாழ்வு தழைத்திட
உளங்கலந்து நின்றானை யான்பெற்ற பேறெனத்
துள்ளும் மகிழ்வினிற் சூழ்ந்து மணந்தேனுக்
கள்ளுஞ் சுவைக்கரும்பா னாள்.

—ஆ. அழகன், புதுச்சேரி

வாழ்க !

காமராசர் பச்சைத் தமிழர் !
நேரு அகில உலக ஜோதி !
காமராசர் தமிழ்நாட்டை
ஆளுகிருர்...
நேரு காமராசரை ஆளுகிருர்...
ஜே ! பாரதமாதாவுக்கு ஜே !
அவள் புத்ராளுக்கு ரெண்டு ஜே !
அதாவது ஜே ஜே !
பீகாரில் வெள்ளம் வந்தது !
நேருவின் இதயத்தில் ரத்தம்
வடிந்தது !
நியாயம்—அவர் பிரதமர் !
அனுதாபம் கோட்டினுர் !
அளக்காமலே கொடுத்தார் !
கண்ணீரைத் துடைத்தார் !
காமராசரும் அழுதார்...
அது அழுகையா ? கடமையா ?
தெரியாது !
ஆனுலும் அழுதார் !
காரணம்... ?
பெரியார் சொல்கிருர் :
"காமராசர் பச்சைத் தமிழர் !"
ஐந்தாண்டுத் திட்ட அபிவிருத்தி !
வாழ்க ! அபி(ன்)—விருத்தியாக !
வடக்கேயே எல்லாம் !
தெற்கே இல்லே !
"ஏன் இல்லே ?"
நாம் கேட்டோம் !
கதறினேம் !
காமராசர் கேட்கவில்லே !
காரணம் ?
பெரியார் சொல்கிருர் :
"காமராசர் பச்சைத் தமிழர் !"
தமிழ்நாட்டில் புயல் வந்தது !
வெள்ளம் வந்தது !
ஆயிரத்துக்குமேல் சாவு !
ஐந்து கோடிக்கு மேல் இழப்பு !
காமராசர் அழுதார் !
ஓடினுர்... இல்லே பறந்தார் !
எல்லோரும் அனுதாபம்
தெரிவித்தார்கள்...
தெற்கில் !
நேரு தெரிவிக்கவில்லே !
ஏன் ?
நாம் கேட்டோம் !
நாடே கேட்டது !
நாளும் கடந்தது...
காமராசர் பறந்தார்...
டில்லியில் குதித்தார்...
நேருவைப் பார்த்தார்...
"நீங்கள் அனுதாபம் தெரிவிக்க
வேண்டும் !"
—காமராசர் சொன்னது !
"ஆகட்டும் பார்க்கலாம் !"
—நேருவின் திருவாய்மொழி !
அது போதும் !
காமராசர் திரும்பினுர் !
பறந்தார் !
சென்னேயில் குதித்தார் !
சொன்னுர் !
"நேரு அனுதாபம்
தெரிவித்தார் !"
—நேரடிச் செய்தி இல்லே !
காமராசர்தான் சொன்னுர் !
"எசமான் அழுதார் !"—என்று
குதிரைக்காரன் சொன்னுன்—
இது உவமை !
வாழ்க !
கேட்டு அனுதாபம் வாங்கினுர் !
அனுதாபமா ?
இல்லே..."அனுதாபம் மாதிரி !"
"சோஷலிச மாதிரி"
—இது உவமை.
காமராசருக்கு உணர்ச்சி
இல்லேயா ?
இல்லே !
காரணம் ?
பெரியார் சொல்கிருர் :
"காமராசர் பச்சைத் தமிழர் !"
வாழ்க ! பச்சைத் தமிழர் !
,, ஊதாத் ,,
,, கருப்புத் ,,
,, சிவப்புத் ,,
சுருக்கமாக ;
வாழ்க "டெக்னிகலர்" தமிழர் !
ஜே ! பாரதமாதா
அடியோடு வாழ்க !

—கண்ணதாசன்.

புயல் நிவாரண வெண்பாப் போட்டி

தொடர்ந்து வெற்றிகரமாக நடந்துவரும் வெண்பாப் போட்டியின் இடையே ஒரு சிறப்புப் போட்டியை தென்றல் துவங்குகிறது. கடும் புயல் விளேவித்த சேதத்தால் அல்லற்படும் லட்சக் கணக்கான மக்களுக்கு நடு தரும் காணிக்கையில் கவிஞர்களின் பணமும் சேர வேண்டும். அதற்காக, இந்தச் சிறப்புப் போட்டியில் ஓர் ஈற்றடி கொடுக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு வெண்பாவிற்கும் பிரவேசக் கட்டணம் ரூ 2 அனுப்ப வேண்டும். இதற்காகப் பரிசுத் தொகை ரூ. 30சகு உயர்த்தப்பட்டிருக்கிறது. முதற் பரிசு ரூ 20, இரண்டாவது பரிசு ரூ. 10 இரண்டு ரூபாய்க கட்டணத்தோடு வரும் எல்லா வெண்பாக்களும் பிரசுரிக்கப்படும். நண்பர்கள் கவிதைத திறனேக் காட்டுவதோடு, புயல் நிவாரணத்திற்கு உதவவும் சந்தர்ப்பம் வாய்க்கிறது. இதில் மீதியாகும் முழுத் தொகையையும் பொதுச் செயலாளர் அறிக்கைப்படி தஞ்சை மாவட்டச் செயலாளருக்கும், மதுரை மாவட்டச் செயலாளருக்கும், தென்றல் அனுப்பி வைக்கும். இதுவரை வெண்பாப் போட்டியில் கலந்து கொண்ட எல்லா நண்பர்களும் இதில் பங்கு பெற வேண்டுகிறும். வெண்பாப் போட்டியின் மூலம் தென்றல் ஆயிரத்திற்கு மேற்பட்ட ரூபாயைப் புயல் நிவாரணத்திற்குத் தருகிறதென்ருல் அது யாருக்குப் பெருமை? உங்களுக்கும் தமிழுக்கும்தான் !

ஈற்றடி : வாழ வகுப்போம் வழி

முடிவு தேதி : **10-1-56**

முகவரி :

**நீதிபதி, புயல் நிவாரண வெண்பாப் போட்டி,
தென்றல், சென்னே - 6.**

★

— 3-ம் பக்கத் தொடர்ச்சி —

(1) கருத்து (2) உணர்ச்சி
(3) கற்பனே (4) அமைப்பு
(கூறும் முறை)

ஆகிய இவை அவ்விலக்கியத்தில் உண்டா என்று கண்டு மதிப்பிடவேண்டும். இவ்வகையில் மதிப்பிடும்போது தமிழிலுள்ள பல இலக்கியங்கள் சிறந்து விளங்கக் காணலாம். சங்க இலக்கியங்களுள் பெரும்பாலன இவ் விதிகளுக்குக் குறைவுபடாமல் இலங்குகின்றன. தமிழ் இலக்கியங்களேப் படித்துப் பாருங்கள் எல்லேயற்ற இன்பம் அடையலாம்.

தமிழிலக்கியம் குறைந்தது 3000 ஆண்டு பழமைமிக்கது; அழகு வளமுடையது; கருத்துயர்வுடையது. வின்ஸ்லோ என்ற தமிழ் இலக்கியம் கற்ற ஆங்கில அறிஞர், "செய்யுள் தன்மையில் கிரேக்க மொழியினேயும் இலக்கியப் பெருமையில் லத்தின் மொழியினேயும் வெல்லுவது தமிழ் மொழியே" என்றும், மர்டாக் என்ற ஆங்கில அறிஞர், "துரானிய மொழிகள் பலவற்றுள்ளும் மிகச் சீரிய மொழியாயும் அழகிய இலக்கியங்களேப் பொருந்தப் பெற்றதாயும் விளங்குவது தமிழே" என்றும் அமிழ்தினும் இனிய தமிழ்மொழியினேப் பாராட்டி எழுதியுள்ளதினின்று தமிழிலக்கியச் சிறப்பினே நன்கு உணரலாம்.

தமிழர்களுடைய குணத்தை உயர்வடையச் செய்து உள்ளத்தைப் பண்படுத்துவதற்கு ஏற்ற கருவி தமிழிலக்கியமே ஆகும். மார்லி என்ற பேரறிஞர், "நல்ல பண்பை உண்டாக்குவதற்கு ஆற்றல் மிக்க கருவி நல்லிலக்கியமே" என்றும் நியூமென் என்ற பேரறிஞர் "உள்ளத்தை விரிவாக்கக் குறைகளேப் போக்கி பண்படுத்தவல்லது இலக்கியமே" என்றும் குறிப்பிடுவதாலும், நம்மவர்கள் உள்ளத்தைப் பண்படச் செய்யும் தெள்ளமுதாம் தண்டமிழ் இலக்கியத்தைக் கற்று இன்பமுற்று இனிதாக வாழ்வார்களாக.

புது மாதிரியான சோபாக்கள் மற்றும் நாற்காலிகள் வர்ண உறுதியுடையது. கோர்த்தியான வேலேப்பாடுகளுடன் கூடியது. கவர்ச்சிகரமானவை.



மலிவான விலேயில் உங்கள் வீடுகள், தோட்டங்கள் அலுவலகங்கள், ஓட்டல்கள், ஸ்டுடியோக்கள் மற்றும் உபசரிப்பு அறைகள் ஆகியவைகளுக்குப் பொருந்தும்படி கிடைக்கும்.

உங்கள் முழுத் திருப்திக்கு உறுதியளிக்கப்படும்

எம். வாசன்,

2-146, மவுண்ட் ரோடு, சென்னே-6.

பொங்கல் மலர்கள்
பொங்கல் அன்று எல்லா இடங்களிலும் கிடைக்கும்

கலேமன்றம்
கலே இலக்கிய மலர்...ரூ.2.

கலேஅரங்கம்
சினிமா மலர்........ரூ.1

சிறுவர் மலர்..... அணு.8

உங்களுக்கு பிரதிகள் நிச்சயமாக கிடைக்க வேண்டுமானுல் உடனே உங்களின் விற்பனேயாளர்களிடம் பதிவு செய்துகொள்ளுங்கள்

விற்பனேயாளர்கள் இல்லாத இடங்களில் விற்பனேயாளர்கள் தேவை.

ஸ்ரீமகள் கம்பெனி
பத்திரிகைப் பகுதி
தபால் பெட்டி 275, சென்னே

★

வேலங்குடித் திருவிழா

கண்ணதாசன்

11

காரில் உட்கார்ந்திருக்கிறேமே என்ற நினைவின்றி, அம்பிகா அழுதாள். டிரைவர் பரிதாபமாக அவள் முகத்தையே பார்த்தான். ஏதோ துக்கச் செய்தி போலும் என்கிறவரைக்குத்தான் அவன் நினைக்க முடிந்தது. அம்பிகா கண்களைத் துடைத்துக்கொண்டு, "காரை எடு" என்ருள். எங்கே என்று கேட்காமலே டிரைவர் காரை ஓட்டினன். நான்கு ரோடுகள் சந்திக்கும் ஒரு இடத்திற்கு வந்தபின்தான் "எங்கேயம்மா போகணும்" என்று கேட்டான். "புரசவாக்கத்திற்கு விடு" என்ருள் அம்பிகா. கார் தொடர்ந்தது.

அம்பிகாவின் மனதில் ஆயிரம் ஆயிரம் எண்ணங்கள்! தன் இடத்தைப் பறித்துக்கொண்ட இந்திராவிற்காக அவள் மனம் இளகிக் கொடுத்தது. சாதாரணமாகவே பொருமை உணர்ச்சிக்கு அடிமைப்படும் பெண் மனம், தன் வாழ்வைப் பறித்தவள் சாகிற நிலைமைக்கு வரும்போது மகிழ்ச்சியடைவது வழக்கம். ஆனல் அம்பிகா அழுதாள். பொருமை இல்லாத பெண்கள் கூட உலகத்தில் இருக்கிருர்கள்.

கார் செல்லச் செல்ல அம்பிகாவின் மனதிலே கற்பனைகள் வளர ஆரம்பித்தன. "இந்திரா இறந்துவிட்டால்...?" இதையும் அவள் மனம் நினைத்தது. அதற்குப் பிறகு...? சீச்சீ! இந்திரா சாகக்கூடாது! சாகமாட்டாள்!"- அம்பிகா இப்படியும் நினைத்தாள், ஏதோ எல்லாம் அவள் கையில் இருப்பதுபோல! சிந்தனைகளில் அல்லாடியபடி புரசவாக்கத்திற்கு வந்து சேர்ந்தாள். தண்டபாணி வக்கீல் வயதானவர். அம்பிகா அவரைப் பார்த்தாள். பாலன்மீதுள்ள வழக்கின் தன்மை பற்றி விவரித்தாள். உலகத்தில் வக்கீல் ஜாதியே தனி! உடம்பில் வர்ணம் ஒட்டியிருந்தால்கூட அதைக் குஷ்டம் என்று சொல்லிப் பயமுறுத்தத் தயங்கமாட்டார்கள் வக்கீல்கள்! 'பூதக் கண்ணுடி புத்தி' அவர்களது தனி உடைமை! வக்கீல் தண்டபாணியும் அதைத்தான் செய்தார். "கடத்தல் கேஸா! அடடே! ரெம்ப சங்கடம் ஆச்சே! ஜாமீன் கூடக் கிடைக்காதே! நம்ம ஜட்ஜுகளெல்லாம் இப்ப ரொம்பக் கண்டிப்பா இருக்காங்க. கடத்தல் கேஸுகளிலே கொஞ்சம் கடுமையாகவே நடந்துக்குறுங்க! நேற்றுக்கூட ஒரு கேஸிலே ஜட்ஜ்மெண்ட் ஆச்சு. 'அஞ்சு வருஷம்' போட்டாரு. அது விஷயமா அப்பீலுக்குப் போயிட்டுத்தான் இப்ப வர்றேன்" என்ருர் வக்கீல்.

"ஏதோ நீங்கள்தான் எப்படியாவது முயற்சி செய்யவேண்டும். பணத்தைப்பற்றிக் கவலையில்லை. இதோ, இருநூறு ரூபாய் வைத்துக் கொள்ளுங்கள்! என்ன கஷ்டப்பட்டாவது முதலில் ஜாமீனில் எடுத்து விடுங்கள்." என்று கூறி இரண்டு நூறு ரூபாய் நோட்டுகளை அவரது கையில் வைத்தாள் அம்பிகா.

"பணத்தைப் பற்றிக் கவலையில்லை!" வக்கீல் இப்போது இப்படிப் பேசினுர்: "முயற்சி பண்றேன். இன்னிக்கிப் போட்டிருக்கிற அப்பீல்கூட 'சக்ஸஸ்' ஆகிடும். கடத்தல் கேஸுன்னு என்ன? சாதாரண சாட்சிகளை வச்சே தண்டிச்சுட்டா மேல் கோர்ட் இல்லையா என்ன? பொம்பளையைக் கடத்திஞன்—சரி! அவளே வந்து நான் இஷ்டப்பட்டுத்தான் போனேன்னு சொல்லும்போது, கேஸ் 'வீக்'காகித்தானே தீரும்! நீங்க சொன்னதைப் பார்த்தா, உங்களைக் கடத்திக்கிட்டுப் போனதாத்தான் வழக்கு! இப்ப நீங்களே அவருக்காக வாதாடுறீங்க! அவருக்காக கேஸ் நடத்துறீங்க! ப்பூ! பாத்துடலாம்! நீங்க ஒண்ணுக்கும் கவலைப் படாதீங்க! ரெண்டு நாளிலே ஜாமீன்லே எடுத்துடறேன்!"

அம்பிகா மகிழ்ச்சியோடு நன்றி கூறிக் கொண்டு எழுந்தாள். வக்கீல், 'பீஸ்' ஒன்றும் பேசாது எழுந்துவிட்டாளே என்று எண்ணிக் கொண்டு "அப்புறம், மத்ததெல்லாம் எப்படி?" என்ருர். "நீங்களே சொல்லுங்கள்" என்ருள் அம்பிகா.

"கேஸை ஜெயிச்சுடலாம்! இருந்தாலும் கஷ்டம் ஜாஸ்தி! எனக்கு இப்பக் கையிலேயே நாலு 'மர்டர் கேஸ்' இருக்கு. குறைஞ்சது மூவாயிரம் ரூபாயாவது..." என்று இழுத்தார் வக்கில். அம்பிகா திடுக்கிட்டாள். ஆனலும் மறுத்துரைக்க வில்லை. பாலன் விடுதலை பெற்றுல் போதும் என்பதே அவளது எண்ணமாயிருந்தது. மூவாயிரம் ரூபாய்க்குச் சம்மதம் தெரிவித்துவிட்டு, "எப்படியும் இரண்டு நாட்களுக்குள் ஜாமீனில் எடுத்துவிடுங்கள்" என்றும் கூறிவிட்டுப் புறப்பட்டாள். அவள் மனம் இப்படிச் சொன்னது: "உலகத்திலேயே கொலை நடந்தால் சந்தோஷப் படுகிறவர்கள் வக்கீல்கள் தான்!"

வெளியில் வந்த அம்பிகா 'திடுதிப்'பென்று ஒரு முடிவுக்கு வந்தாள். மேலைசசிவபுரிக்குப் புறப்பட்டுப் போய் சுந்தரத்தைப் பார்த்து, பாலன் ஜாமீனில் வெளிவரும் மகிழ்ச்சிச் செய்தியைக் கூறுவது என்பதுதான் அது. "அதிலாவது இந்திராவின் உடல்நிலை தேருதா" என்று எண்ணிஞள். உடனேயே காரில் ஏறிக்கொண்டு "எழும்பூர் ஸ்டேஷனுக்கு விடு" என்ருள்.

மறுநாள்...

காலையில் புதுக்கோட்டையில் இறங்கிய அம்பிகா, பஸ்ஸில் ஏறி, மேலைச்சிவபுரி வந்து சேர்ந்தாள். அப்போது சுமார் பதிஞெரு மணியிருக்கும். ஊருக்குள் வந்த அம்பிகாவின் எதிரே ஒரு சவ ஊர்வலம் வந்தது. அம்பிகா திடுக்கிட்டு பயந்தபடியே ஒரு சந்துப் பக்கம் நின்றுகொண்டாள். சவ ஊர்வலம் கடந்தது. கூர்ந்து கவனித்தாள். சுந்தரம், சொக்கப்ப பிள்ளை, சின்னப்ப பிள்ளை எல்லோரும் கண்ணீர் வடித்தபடி அந்த ஊர்வலத்தின் பின்னுல் வந்த கொண்டிருந்தார்கள். அம்பிகா முந்தானைத் தலைப்பால் வாயை மூடிக்கொண்டாள். அழவில்லை! அழுவதற்கு அவள் உடம்பிலே திராணியில்லை! "இந்திரா இறந்துவிட்டாளா?" குழப்பம் மீக்கூற சிலையாக நின்ருள் அம்பிகா! "இனி எப்படி சுந்தரத்தைப் பார்ப்பது? என்ன ஆறுதல் கூறுவது? சுந்தரத்தின் பெற்றேர் நம்மைக் கண்டால் சும்மா விடுவார்களா? நாம்தான் இவ்வளவுக்கும் காரணம் என்று அவர்கள் நினைத்திருக்கிருர்களே" — அம்பிகா திரும்பி நடந்தாள். மேலைச்சிவபுரியில் நிற்கவே அவள் விரும்பவில்லை. கடலில் படகைக் காற்றடித்துச் செல்வது போல், சென்று கொண்டிருந்தாள். சிட்டென்றும் முல்லை மொட்டென்றும், சிங்காரப் பேடையென்றும் வர்ணிக்கத்தக்க ஒருத்தி — "பள்ளியறையில் பலரையும் சந்திக்கத் தயார்" என்று கூறிவிட்டால், பொன்னையும் பொருளையும் அள்ளிக் குவித்துப் பூரித்து வாழக்கூடிய வசதி படைத்தவள் — தலையசைக்க மறுத்துத் தவிக்கிருள்!—அபூர்வமாக இப்படியும் நடக்கும் என்பார்கள்— நடத்திக் காட்டிஞள், அம்பிகா! நெறியான வாழ்வுக்காக அலைந்தாள்! 'கற்போடு வாழ முயன்ருல் கஷ்டங்கள் பல உண்டு"— கண்ணகி காலத்திலிருந்து கதை இதுதானே! அந்தக் கஷ்டங்களைத் துச்சமாக மதித்ததால் தான் உலகு கற்பின் செல்வியரை ஏற்றிப் புகழ்கிறது!

அம்பிகா, காட்டு வழியே நடந்து வந்து கொண்டிருந்தாள். நூறு ரூபாய்களுக்குமேல் மடியில் பணம் வைத்திருந்தாள். திடீரென ஒரு இடத்தில் நின்று, பஸ் போகும் பாதையை நோக்கி நடந்தாள். வெகுநேரம் அந்தப் பாதையில் நின்று பார்த்தாள். பஸ் வரவில்லை. ஒரு சிறிய 'பாண்டியாக்' கார் வந்தது. அம்பிகாவைப் பார்த்து, அந்தக் காரோட்டி காரை நிறுத்திஞன். உள்ளே இரண்டு பெண்கள் உட்கார்ந்திருந்தார்கள். அவர்கள், அம்பிகாவைப் பார்த்து, "எங்கேம்மா போகணும்" என்று கேட்டார்கள். "புதுக்கோட்டைக்கு" என்ருள் அம்பிகா.

"ஏறிக்கொள்" என்ருர்கள், அவர்கள்.

அம்பிகா ஏறிக்கொண்டாள். கார் நகர்ந்தது.

அவர்கள், சென்னையைச் சேர்ந்தவர்களாம்! நாட்டியக்காரிகளாம்! புதுப்பட்டியில் நடந்

ஒரு திருமணத்தில் ஆடிவிட்டுத் திரும்பிக் கொண்டிருக்கிறார்களாம். அந்த டிரைவர் அம்பிகாவைப் பார்த்திருக்கிறானும். அதனுல்தான் காரை நிறுத்திஞனும். பிறகு அந்தப் பெண்கள், அம்பிகாவைச் சென்னையிலேயே கொண்டுபோய் விடுவதாகக் கூறிஞர்கள். அம்பிகா ஆறுதலடைநதாள். வழிநெடுக அம்பிகா அவர்களோடு பேசிக்கொண்டு வந்தாள். அவளது கதையைக் கேட்ட அவர்கள், அவளைத் தங்கள் கூட வைத்துக்கொள்ள விரும்பிஞர்கள். அவர்களின் பேச்சு அம்பிகாவுக்குப் பிடித்திருந்தது; சம்மதித்தாள்.

தொல்லைகளைத் தொடர்ந்து வழங்கிய சென்னை மீண்டும் அம்பிகாவை வரவேற்றது. அந்த நாட்டியக்காரிகளின் பெயர்கள், வனஜா - கிரிஜா என்பதாம். அவாகள் வீடு பெரிய மாளிகை போல் இருந்தது. அது அவர்களது சொந்த வீடாம் அடையாறிலேயே அதுதான் பெரிய வீடாம்!—அம்பிகா ஆச்சரியத்தோடு எல்லாவற்றையும் கவனித்தாள். ஒரு சமையற்காரன்—காரோட்டி, பையன் ஆயா—ஒரே தர்பார்! அம்பிகாவுக்கு இப்போது ஒரு வகையான நிம்மதி கிடைத்தது. பாலன் விடுதலை சுலபமாகும் என்று எண்ணிஞள். கேரம் போர்டு விளையாடுவதும், டேபிள்-டென்னிஸ் ஆடுவதும், ரேடியோகிராமை முடுக்குவதுமாக அன்று முழுதும் உற்சாகமாக இருந்தாள். அந்த நாட்டியக்காரிகளில் வனஜா அழகி. ஆனுல் அவளைக் காட்டிலும் கிரிஜா பேரழகி. இருவருமே இளகிய மனம் படைத்தவர்கள்.

தாங்கள் மலேயாவுக்குப் போயிருந்தது பற்றியும், இலங்கையில் போய் ஆடியதைப் பற்றியும் அவர்கள் அம்பிகாவிடம் பெருமையாய்ப் பேசிக் கொண்டிருந்தார்கள். அன்று இரவு சுமார் ஒன்பது மணியிருக்கும். அந்த வீட்டிற்கு ஒரு அழகிய இளம் வாலிபர் வந்தார். வனஜாவும், கிரிஜாவும் துள்ளிக் குதித்து ஓடி அவர்களை வரவேற்றார்கள். வந்தவர்கள் யாரென்று புரியாமல் அம்பிகா விழித்தாள். பளிச்சென்று "இவர் எங்கள் மாமா" என்று அறிமுகப்படுத்தி வைத்தாள் வனஜா. அம்பிகா தெளிந்தாள். வந்த வாலிபர் விடுவிடென்று மாடிப்படிகளில் ஏறிஞர். வனஜாவும் பின்னுலேயே சென்ருள். கிரிஜா கீழே அம்பிகாவுக்குப் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டாள். சிறிது நேரம் கழித்து, கிரிஜா அம்பிகாவைப் பார்த்து, "நீ தூங்கவில்லையா?" என்று கேட்டாள். அம்பிகா பதில் சொல்லாமல் சிரித்துக் கொண்டே தன் அறைக்குச் சென்று படுத்தாள். வெகுநேரம் படுக்கையில் புரண்டாள். தூக்கம் வரவில்லை. வேதனையில் நீந்திய அவள் உள்ளம் இப்போது பழைய காதல் பாதையைத திறந்து கொண்டிருந்தது. அந்தப் பாதையில் இப்போது பாலனும் சுந்தரமும் போட்டி போட்டுக் கொண்டிருந்தார்கள். சபலப்பட்ட மனது வளைந்து வளைந்து நடக்கிறது.

"இந்திரா இறந்து விட்டாள். வாழ்ந்திருந்தால் பாலனைப்பற்றி நாம் சிந்திக்கப் போவதில்லை. இனி பாலன் நம்முடையவராவாரா? சுந்தரம் கூட நல்லவர் தான். பாலன்! சுந்தரம்'" அம்பிகாவின் உடலும் உணர்ச்சி வசப்பட்டது. பாலன் வருவது போலவும், அருகில் உட்காருவது போலவும்...! அவள் முதலிரவு இன்பத்தைக் கற்பனையிலேயே பெற முயற்சித்தாள். மணி பன்னிரெண்டடித்தது. தூக்க உணர்ச்சியை அறவே இழந்துவிட்ட அம்பிகா, மெதுவாக எழுந்து வெளியே வந்தாள். மாடியிலிருந்து சிரிப்புச் சத்தம் பெருத்த அளவில் வந்து கொண்டிருந்தது. என்ன நடக்கிறது என்பதைக் கணக்குப் போட அம்பிகாவுக்கு அதிக நேரம் பிடிக்க வில்லை. "இந்தத் தொழிலும் நாட்டியத் தொழிலின் ஒரு கிளைதானே? ஏன் நாட்டியக்காரிகள் எல்லோரும் இப்படி இருக்கிறார்கள்?" —அம்பிகா சிரித்தாள். அவளுக்குத் தெரியாது, வெறும் நாட்டியத்தில் மட்டும் சம்பாதித்து பெரிய மாளிகை கட்டிவிட முடியாது என்பது.

மேலே என்ன நடக்கிறது என்பதைப் பார்க்க அவள் மனம் விரும்பிற்று. மெதுவாக மாடிப் படிகளில் ஏறிஞள். மாடி அறைக் கதவு லேசாகத் திறந்திருந்தது. அடித்துக் கொள்ளும் நெஞ்சோடு அம்பிகா கவனித்தாள். அங்கே அந்த வாலிபரின் மடியில் வனஜாவும் கிரிஜாவும் சாய்ந்திருந்தார்கள். ஒரு ஆடவரின் மடியில் இரண்டு பெண்கள்! இதென்ன காதல்?

அம்பிகா வெகு நேரம் அங்கு நிற்கவில்லை. இறங்கிக் கீழே வந்துவிட்டாள். அவள் மனது தனக்குத் தானே ஒரு ஆறுதல் கூறிக் கொண்டது. "பாவம்! இவர்கள் இந்த வழியிலேயே பழகி விட்டார்கள். ஆனுலும் இதயம் நல்ல இதயம். நமக்கென்ன! நாம் ஒழுங்காக இருப்போம். அதற்காக இந்த இடத்தை விட்டுப் போகவேண்டாம்" என்று எண்ணியபடி தன் அறைக்குள் வந்து படுத்துக் கொண்டாள்.

பொழுது விடிந்தது. கொஞ்சம் முன்னுலேயே எழுந்துவிட்ட அம்பிகா குளித்து, வக்கிலைப் பார்க்கப் புறப்படடாள். வனஜாவிடம் சொல்லிக் கொள்வதற்காக மாடிக்குச் சென்ருள் அங்கு வனஜாவும் கிரிஜாவும் நன்ருகத் தூங்கிக்கொண்டிருந்தார்கள் தூக்கத்தைக் கலைக்க வேண்டாமென்று எண்ணிய அம்பிகா கீழே இறங்கி வந்து, அவர்கள் காரையே எடுத்துக் கொண்டு புறப்பட்டாள்

புரசவாக்கம் வந்து வக்கிலைப் பார்த்தாள். வக்கில் தண்டபாணி மலர்ந்த முகத்தோடு அவளைப் பார்த்து, "நேற்றே 'பைல்' பண்ணியாச்சு; முடிவு இன்னைக்குத் தெரியும். சாதகமாக இருக்கும்னு - நெனக்கிறேன்" என்ருர். அம்பிகா அவர் கூடவே இருந்து, சுமார் பதினேரு மணிக்கு அவருடன் கோர்ட்டுக்குச் சென்ருள். வக்கில் நம்பிக்கையூட்டினர் என்ருலும் அம்பிகாவின் இதயம் என்னவோ பதறிக்கொண்டுதானிருந்தது. சுமார் மணி 12-30க்கு ஜாமீன் மனு விசாரணைக்கு வந்தது. நீதிபதி அம்பிகாவின் தாயார் சார்பில் ஆஜரான வக்கிலைப் பார்த்து, "ஜாமீனில் விடுவதில் உங்களுக்கு மறுப்பொன்றும் இல்லையே?" என்று கேட்டார். அம்பிகா உடனே அந்த வக்கிலின் அருகில் போய் நின்று வணங்கிஞள். "மறுப்பில்லை" என்ருர் அந்த வக்கில். நீதிபதி பாலனை இரண்டு நபர் ஜாமீன் பேரிலும், இரண்டாயிரம் ரூபாய் ரொக்க ஜாமீன் பேரிலும் விடுதலை செய்ய உத்தரவிட்டார்.

அம்பிகா ஆனந்தத்தில் துள்ளிக் குதித்தபடி நபர் ஜாமீனுக்கு ஆள் தயார் செய்து கொண்டு வருவதாக, வக்கிலிடம் சொல்லி விட்டுப் புறப்பட்டாள்.

சிறையிலிருந்த பாலனுக்கு எந்தச் செய்தியும் தெரியாது. ஜாமீன் முயற்சி கூட அவனுக்கு அறிவிக்கப்படவில்லை. அவன் பெரிய ஞானிமாதிரி ஆகியிருந்தான். 'ரிமாண்டு' கைதிகளுக்கு வேலை கிடையாதாகையால், பாலன், கைதியறை வராந்தாவில் முன்னும் பின்னுமாக உலாவிக் கொணடிருந்தான். சிறைக்கு வந்ததிலிருந்தே அவன் இப்படித்தான் நடந்து கொண்டிருந்தான். ஆகா! நடந்து நடந்து யோசிப்பதில்தான் எவ்வளவு யோசனைகள் பிடிபடுகின்றன! சிறைச்சாலைகளில் ஒவ்வொரு அறையிலும் கைதிகள் கரியால் ஓவியம் தீட்டியிருப்பார்கள். பெரும்பாலும் பெண் படமாகவே இருக்கும். சிறையிலே பெண்களைப் பார்க்க முடியாதாகையால் அவர்கள் இதிலே ஆத்மதிருப்திப்பட்டுக் கொள்வார்கள். பாலன் இருந்த அறையிலும் அதுபோல ஒரு பெண்ணின் படமிருந்தது. அந்த அறையிலேயே அவனேடு இருந்த ஒரு கொலை வழக்குக் கைதிதான் அதைத் தீட்டியவன் அந்தக் கைதியின் பெயர் சங்கரன். மாமியாரைக் கொன்ற குற்றத்திற்காக அவன் சிறைக்கு வந்திருந்தான். அவன் வரைந்திருந்தது அவன் மனைவியின் உருவத்தைத்தானும். பாலனிடம் அவன் எல்லாக் கதைகளையும் சொல்லியிருந்தான். அவன் பெரிய ஓவியனும். தன் அத்தை மகளையே கட்டிக்கொண்டானும். அத்தை கொஞ்சம் துடுக்குக்காரியாம். கட்டிக்கொடுத்த பெண்ணைத் தன் வீட்டிற்கே அழைத்து வந்து நாட்டியம் கற்றுக் கொடுத்தாளாம். கூடவே இருந்த அவள் தங்கைக்கும் சேர்த்து நாட்டியப் பயிற்சி கொடுத்து, அரங்கேற்றினுளாம். பெயரும் புகழும் வர ஆரம்பித்ததாம். அதுமுதல் சங்கரனை வெறுப்பதற்கு ஆரம்பித்தார்களாம். அதனுல் ஆத்திரம் கொண்ட அவன் தன் அத்தையைக் குத்திக் கொன்று விட்டானும். நீதிபதி சட்டப்படி ஆயுள் தண்டனை விதித்து விட்டாராம்.

அவன் எப்போதும் பாலனிடம் சொல்லுவான், "என்னைக்காவது சிறையிலேயிருந்து தப்பிச்சு ஓடி, என் சம்சாரத்தை குத்திக் கொன்னுட்டுத்தான் மறுவேலை" என்று! அப்போதெல்லாம் பாலன் அவனுக்கு ஆறுதல் சொல்லி, தத்துவம் போதிப்பான். பிறருக்கு உபதேசம் செய்யும் சந்தர்ப்பம் கிடைத்தால் எவ்வளவு மடமடவென்று தத்துவம் வருகிறது? பாலன் சங்கரனுக்கு உபதேசிக்கும்போது, வாழ்க்கையின் ஒவ்வொரு கூறையும் அணு அணுவாகப் பிரித்து அலசி, "இப்படி இருந்தால் துன்பமே இல்லை" என்று முடிப்பான். முடித்த மூன்று மணி நேரத்திற்குப் பிறகு தன் வாழ்வை எண்ணிக் கொண்டு அழுவான். அன்று மாலை சங்கரனேடு பாலன் பேசிக்கொண்டிருந்தான். "இந்தப் படத்தில் உள்ள மாதிரியே தானு உன் மனைவி இருப்பாள்?" என்று சங்கரனைப் பார்த்து பாலன் கேட்டான். "ஆம்" என்ருன் சங்கரன். "அவள் பெயர்?" என்று பாலன் கேட்டதற்கு, "வனஜா! தங்கை பெயர் கிரிஜா!" என்று முடித்தான் சங்கரன்.

சிறிது நேரத்திற்கெல்லாம் ஒரு கைதி கையில் ஒரு வெள்ளைக் காகிதத்தோடு ஓடி வந்தான். "ஏதோ 'இண்டர்வியூ' வருகிறது" என்ருன் சங்கரன். ஓடி வந்த அக்கைதி பாலனைப் பார்த்து "உங்களுக்கு ஜாமீன் விடுதலை வந்திருக்கு சார்! கூப்பிடுருங்க, புறப்படுங்க!" என்ருன். பாலன் மனம் ஆனந்தப் பெருக்கில் திளைத்தது. கைதியாக இருந்து பார்த்தால்தான் விடுதலையின் சுகம் தெரியும்.

பாலன் சங்கரனிடம் பிரியா விடைபெற்றுக் கொண்டான். "நீங்க போங்க சார்! நாலு நாளையில் 'எஸ்கேப் ஆயி வந்துடறேன்" என்ருன் சங்கரன். பாலன் சிரித்துக் கொண்டே புறப்பட்டான். கூடவே சங்கரனும் சிறைக்கதவு வரைக்கும் வந்தான். அங்கிருந்து ஜன்னல் வழியே பார்த்தால் வெளியே நிற்பவர்களைப் பார்க்க முடியும். வெளியில் அம்பிகா, வனஜா, கிரிஜா எல்லோரும் பாலனை எதிர்பார்த்துக் கொண்டு நின்றனர். விடுதலையாகி வந்த பாலனை உற்சாகமாக வரவேற்ருள் அம்பிகா. அடுத்த கணம் அவள் முகம் மாறுபட்டது. "இந்திரா... இந்திரா...! இறந்துவிட்டாள்..." என்று குழறியபடியே கூறிஞள். பாலன் கதறி அழுது விட்டான். திடீரென்று "வனஜா! வனஜா" என்று ஒரு சத்தம் கேட்டது. பாலன் திரும்பிப் பார்த்தான். சங்கரன் காவலர்களை மீறி ஓடிவந்து வனஜாவைத் தூக்கிக் கொண்டான்.

திருக்குறள் புது உரை

இயல்புடைய மூவர் யார்?

இல்லறத்தார்

"இல் வாழ்வா னென்பா னியல்
புடைய மூவர்க்கும்
நல்லாற்றி னின்ற துணை"

(அதி. இல்வாழ்க்கை-குறள்-1)
பரிமேலழகர் கூற்று.

1. "இல்லறத்தோடு கூடி வாழ்வானென்று சொல்லப்படுவான், அறவியல் புடைய ஏனை மூவர்க்கும் அவர் செல்லும் நல்லொழுக்க நெறிக்கண் நிலைபெற்ற துணையாம். ஏனை மூவராவர், ஆசாரியரிடத்தினின்று ஓதுதலும் விரதங்காத்தலுமாகிய பிரமசரிய வொழுக்கத்தானும்; இல்லை விட்டு வனத்தின் கட்டீயோடு சென்று மனையாள் வழிபடத் தவஞ் செய்யுமொழுக்கத்தானும் (வானப் பிரஸ்தன்); முற்றத் துறந்த யோக வொழுக்கத்தானுமென இவர்; இவருள் முன்னையிருவரையும் பிறர்மதமேற்கொண்டு கூறினார்; இவர் இவ்வொழுக்க நெறிகளை முடியச்செய்யுமளவும், அச்செலவிற்குப் பசி, நோய், குளிர் முதலியவற்றால் இடையூறு வாராமல், உண்டியும், மருந்தும், உறையுளும் முதலிய உதவி, அவ்வவ் நெறிகளின் வழுவாமற் செலுத்துதலான், நல்லாற்றில் நின்ற துணையென்றார்."

2. இக்கூற்றின்,பொருத்தத்தை, உண்மையை, ஆராய்வது இதன் நோக்கம், பரிமேலழகர் கொண்ட கூற்றினின்று எழும் ஆராய்ச்சிக்குரிய படிகள் பல; அவைகள்,

(1) 'மூவர்' என்பது, பிரமசாரி, வானப்பிரஸ்தன் சந்நியாசியைக் குறிக்குமா?

(2) 'இயல்புடைய' 'அறவியல் புடைய' என்பதின் பொருள் யாது?

(3) வள்ளுவர் வகுத்த 'இல்லறத்தான்' ஆரியர் கொண்ட கிரகஸ்தனா?

(4) ஆம் எனின், உண்டி, உறையுள், மருந்து முதலியன அவர்களுக்கு உதவவேண்டுமென, குறளில் கூறப்பட்டிருக்கிறதா? வகுத்த கடமைகளுள் இவை காணப்படுகின்றனவா? ஆதாரம் எங்கே?

(5) பிரமசாரி, வானப்பிரஸ்தன், சந்நியாசி இவர்களால், கிரகஸ்தனிடமிருந்து இவைகள் வேண்டப்படுவனவா?

(6) கிரகஸ்தன்,இவைகளை உதவி, அவரவர் நெறிக்கண் வழுவாது அவர்களை எவ்வாறு செலுத்தல் கூடும்; இவையின்றேல் அவர்கள் நெறியினின்று வழுவி விடுவார்களா?

(7) வள்ளுவர் வகுத்த இல்லறத்தானுக்கு இது அறனா?

(8) வள்ளுவர் கருத்தின்படி ஒழுக்கமாவது யாது?

3. முதன் முதலாக வள்ளுவர் போற்றும் 'அறம்' யாதெனப் பார்ப்போம். "அறனெனப்பட்டதே இல்வாழ்க்கை" என்றார், சிந்திப்போர்க்கு, இல்லறத்தைவிட எவற்றையும் பெரிதாகக் கொள்ளவில்லை யென்பது தெளிவு. தேற்றேகாரத்தின் நோக்கம் என்ன? ஆரியர் கொண்ட அறநிலைகள் பெரிதென எண்ணப்படவில்லையென்பது தெளிதல் வேண்டும். இதற்குப் போதிய சான்றுகள் குறளில் பலவிடத்துங் காணலாம். அவர் கூறிய இல்லறத்தின் இயல்புகளைப் பார்ப்போம்; "மனத்துக்கண் மாசிலனாதல்; அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாச்சொல் நான்கும் இழுக்காது இயன்றது அறம்." இது பொதுவாகக் கூறினது. சிறப்பாக எண்ணும்போது, முன்காட்டியபடி இல்வாழ்க்கையே அறம். அவ்வில் வாழ்வான் செய்யவேண்டிய கடமைகளைப் பலபடவகுத்துள்ளார். அவைகளில் சில பின்வருமாறு. தென்புலத்தார்,தெய்வம்,விருந்து, ஒக்கல், தான், என்று ஐம்புலத்தார் ஓம்பல்; மனைத்தக்க மாண்புடையாளை வாழ்க்கைத் துணையாகக்கொளல்; அறிவறிந்த மக்கட்பேற்றைப் பெறல்; அம்மக்களை அவையத்து முந்தியிருப்பச்செயல்; தம்மினும் தம்மக்கள் அறிவுடைமையாதல்; அன்பின் வழியது உயிர்நிலை யென்றறிதல்; இல்வாழ்வது விருந்தோம்பி வேளாண்மை செய்தற்பொருட்டு என்று உணர்தல்; வருவிருந்து வைகலும் ஓம்புதல்; விருந்து புறத்ததாத் தானுண்ணாமை; இன்சொலனாதல்; பணிவுடையனாதல்; செய்ந்நன்றி மறவாமை; மாசற்றார் கேண்மை நுகர்தல்; நன்றல்லதை அன்றே மறத்தல்; நடுவிகந்தாமாக்கத்தை அன்றே ஒழியவிடல்; நடுவொரீயல்ல செய்யாமை; தன் குடியின் ஒழுக்கத்திற் தாழாமை; பிறனில் விழையாமை; இகழ்வாரைப் பொறுத்தல்;பயனில சொல்லாமை; தீவினை யஞ்சுதல்; மறந்தும் பிறன் கேடு சூழாமை; வறியோர்க்கீதல்; அற்றார் அழிபசி தீர்த்தல்; இசைபட வாழ்தல்; புகழொடு தோன்றுதல்; ஆகிய முறைவழிநின்றி "வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்" இல்லறத்தை நடத்தியவனுவன்; இவன்தான் வள்ளுவரின் இல்லறத்தான் (கிரகஸ்தன்.)

4. ஆரிய கிரகஸ்தனோ (இல்லறத்தான்) தினந்தோறும் ஆரிய வேதத்தை ஓதல்வேண்டும்; வீட்டில் அணையாத் தீயொன்றை வளர்த்துத்தொழுதல் வேண்டும்; பிரமசாரிக்கு வகுத்த விரதங்களையும் அநுட்டித்தல் வேண்டும்; அக்கினியை முதற் தெய்வமாக வணங்குவதோடு உயிர்ப்பலியிட்டு யாகங்கள் செய்து தேவர்களுக்கும், இந்திரன் சோமன் முதலாய தெய்வங்களுக்கும் உணவு கொடுத்து அவைகளைத் தானும் உண்ண வேண்டும்; தமக்குக் கிடைக்கும் பொருள்களின் ஒரு பகுதியைத் தம் கடவுளர்க்குக் கொடாமல் அனுபவிப்பவன் திருடனென்று கருதப்பட்டான்; பதஞ்சலியின் 'மகாபாஷ்யம்' விதிப்படி கிரகஸ்தன் யாகஞ் செய்யவேண்டிய கடமையுளான். திருவள்ளுவரோ விருந்தோம்பலையே யாகமாக (வேள்வியாக) இல்லறத்தானுக்கு விதித்தனர். "பரிந்தோம்பிப் பற்றற்றேம் என்பர் விருந்தோம்பி வேள்வி தலைப்படாதார்."

5. இக்கூற்றை, வள்ளுவர் வகுத்துள்ள நியதிகளோடு ஒப்பிடுங்கள்; கிரகஸ்தனுக்கு எக்கடமை முதன்மையாகக் கூறப்பட்டுளதோ அதைப் பற்றித் தினையளவேனும், குறிப்பாகக் கூடச்சொல்லவில்லை; ஆனால் வள்ளுவர் மிகவும் அதனைக் கடிந்துள்ளார்; அறவினை யாதெனிற் கொல்லாமை கோறல்' என்ற வள்ளுவர் வாக்கை எண்ணுங்கள். மேலும் வள்ளுவர் இல்லறத்தானுக்கு முதன்மையாகக் கூறியது "வேளாண்மை." இது ஆரிய கிரகஸ்தனுக்கு முதன்மையல்ல. ஆகவே குறளில் கூறிய இல்லறத்தான் ஆரிய கிரகஸ்தன் அல்ல. இன்றேல், பிரமசரியம், வானப்பிரஸ்தம்,சந்நியாசம் என்ற மற்ற ஆசிரம நிலை எழுவதற்கில்லை.

6. மேலும் பார்ப்போம். வள்ளுவர் இல்லறத்தானுக்கு வேளாண்மையை, உழவுத் தொழிலைச் சிறந்த முதற்கடமையாக ஓதியுள்ளார்; ஆரிய நூல்படி இது சிறந்த தொழில் அல்ல; மனு நூலில் உழவுத் தொழில் இழி தொழிலாகக் கருதப்பட்டுள்ளது. உழவனுடைய சிறப்பையும் பெருமையுங் கூறுமிடத்து "இரவார், இரப்பார்க்கொன்றீவர்"என்றார் வள்ளுவர், இப்பண்பு பிராமணனுக்கு உரியதென்று சொல்லுவார் யார்? பிரமசரியத்தை அறவியல்புடையதென்று வள்ளுவர் எண்ணியிருந்தால், இல்வாழ்க்கையை வகுக்கு முன்பு அதைப் பற்றி வள்ளுவர் கூறியிருத்தல்வேண்டுமே! இல்வாழ்க்கையை வியந்தோதியதிலாவது எங்கேயாவது ஓர் இடம்பெற்றிருக்கலாம். அதுவுமில்லை. வானப்பிரஸ்த ஒழுக்கத்தையேனும், சந்நியாசி ஒழுக்கத்தையேனும் இவ்வியலில் குறித்துளாரா? இல்லை! இல்லை!

> எழுதியவர்
> **எம். சோமசுந்தரம்**
> பி. ஏ., எல். டி
> முன்னைத் தலைமை ஆசிரியர்,
> உறுப்பினர்: ஆர்.பி.எ. மன்றம்,
> லண்டன்மாநகர்.

7. இனிப் பரிமேலழகர் கொள்கைப்படி ஆரிய கிரகஸ்தனுவது, உண்டி, உறையுள், மருந்து முதலியன வழங்க வேண்டுபவனுவென்பதை ஆராய்வோம். ஆரிய நூல் விதிப்படி வானப்பிரஸ்தன், வனத்தில் மனைவியோடிருந்து, அங்கு கிடைக்கும் பழம், கிழங்கு முதலியவற்றையோ அல்லது யாராவது, இரக்கத்தால், அன்பால், அளித்த உணவையோ யுண்டு, உலக வாழ்வின் இழிவையும், பிறப்பின் தீமையையும் ஒழிப்பதற்கு வேண்டிய சிந்தனையில் ஆழ்ந்திருப்பவன். இந்நிலை, குறளையன்றி, வேறு, எந்தப் பண்டைத்தமிழ் நூலாவது தமிழகத்தார்க்குஉண்டென்று கூறுகிறதா?

8. 'யாதி' அல்லது சன்னியாசி எனப்படுவோர் "ஐந்து விரதங்களை அனுட்டிக்கும் கடமையுளார்; அவர் இரந்து உண்ணவேண்டும்; தன் உடம்பை எலும்பும் நரம்பும் தோன்ற வாட்டவேண்டும்; பூமியில் விழுந்து புரளவேண்டும்; கால் விரல்களின் நுனியின்மேல் நாள் முழுதும் நிற்கவேண்டும்; இடையிடையே உட்காருவதும் நிற்பதுவுமாக இருந்து வரவேண்டும்; வெயிற் காலங்களில் சூரிய வெப்பத்தைத் தாங்கி நிற்கவேண்டும்; மழை பெய்யும்போது மழையில் அகப்பட வேண்டும்; நனைந்த உடையையே யுடுக்கவேண்டும்; சாகுந்தருணம் வரும்போது வடமேற்கை நோக்கி நடந்துகொண்டேயிருந்து உயிர் அகலும் வரை, காற்றையும் நீரையும் உணவாகக் கொள்ளல்வேண்டும்." இந்நிலையில், உண்டி, உறையுள், மருந்து முதலியன எதற்கு? 'துறவறம்' என்று வகுக்கப்பட்ட இயல்களிலும் இவ்விரதங்கள் கூறப்படவில்லை. துறவறவியலுக்கு வகுத்துள்ள அதிகாரங்களை, எண்ணிப் பார்க்கின், அவைகள் அவ்வியலுக்குச் சிறிதும் பொருந்தாவென்று கூறலாம். ஆகவே பரிமேலழகர் கூற்று, ஆரியக் கிரகஸ்தனுக்குக் கூட விதிக்கப்படா, பொருந்தாக் கூற்றென்றே முடிவு செய்தல் வேண்டும். பரிமேலழகரின் ஆதாரம் இன்னதென்று விளங்கவில்லை. விதிக்கப்படாக் கடமைகள் எவ்வாறு குறள் உரையிற் புகுந்தன? இவ்வாறு ஆரிய நூலே பரிமேலழகரின் கருத்துக்கு இடந்தராவிடில் வள்ளுவரின் இல்லறம் அதற்கு இடந்தருவது எவ்வாறு?

9. மேலும், ஆரியர் வகுத்த நான்கு நிலையும், பிராமண வருணத்திற்கே உரியன எனலாம்; என்னையெனின், சந்நியாசி நிலை முத்திக்கு வழி; பிராமணனாய்ப் பிறந்தவனுக்கே முத்திக்கு வழியுண்டென்று ஆரிய நூல் விதித்துள்ளது. "பிறப்பொக்கும் எல்லாவுயிர்க்கும்" என்று நீட்டிய வள்ளுவர், தமிழகத்து இல்லறத்தானைப் பார்த்து, சைவத்துக்கு வேற்றுமையான பிராமண மதத்தானுக்கு, அச்சிறு பகுதியினர்க்கு, அவரது ஆசிரம நிலைகளில் உதவி செய்யவென்று சிறப்பித்துக் கூறவேண்டிய, குறுகிய மனப்பான்மை வள்ளுவர் நோக்கத்திற்குச் சிறிதும் பொருந்தாது. அவர் நோக்கத்தின்படி "பேரறிவாளன் திரு ஊருணி நீர் நிறைந்தற்றே" என்ற பண்பிலல்லவோ அமையவேண்டும்!

- அடுத்த இதழில் முடியும் -

★ ★★ ★

குழந்தை மணம்

17 வயது வாலிபனுக்கும் 16 வயதுப் பெண்ணுக்கும் காதல் உண்டாயிற்று. அவளை மணம் செய்து வைக்காவிட்டால், அவளை அழைத்துக்கொண்டு ஓடிவிடப் போவதாகப் பெற்றோரை மிரட்டினான். வேறு வழியில்லாமல் பெற்றோர் அதற்கு இசைந்தார்கள். மணம் நடந்தது.

கோயிலில் பாதிரியார் சொல்லிக் கொடுத்த பிரமாணத்தைப் பையன் சொன்னான். ஓரிடத்தில், "உலகிலே எனக்குள்ள எல்லாச் சொத்தையும் உனக்கே அளிக்கிறேன்" என்ற வசனம் வந்தது. பையன் அதைச் சொன்னதும், அப்பாவின் காதில் அம்மா கிசுகிசுத்த குரலில், "அவன் சைகிள் போச்சு" என்றான்.

★ ★★ ★

பன்மொழிப் புலவர். கா. அப்பாதுரையார் எம். ஏ., எல். டி

பதில் தருகிறார்

ப. அ. இசுமாயில், சென்னை.

ராவ்பகதூர் பி. சுந்தரம் பிள்ளை எழுதிய "நீராரும் கடலுடுத்த நிலமடந்தைக் கெழில் ஒழுகும்" என்று தொடங்கும் பாடலை, முழுதும் எழுதி, அதற்குரிய மெய்ப் பொருளையும் தர இயலுமா?

நீராரும் கடலுடுத்த
நிலமடந்தைக் கெழிலொழுகும்
சீராரும் வதனமெனத்
திகழ்பரத கண்டமிதில்,
தக்கசிறு பிறைநுதலுந்
தரித்தநறுந் திலகமுமே
தெக்கணமும் அதிற்சிறந்த
திரவிடநற் றிருநாடும்;
அத்திலக வாசனைபோல்
அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ்மணக்க
இருந்தபெருந் தமிழணங்கே!

நீர் நிறைந்த கடல்சூழ்ந்த உலகமாகிய பெண்ணுக்கு அழகு நிறைந்த முகமாகப் பரதகண்டம் என்னும் இந்தியா திகழ்கின்றது. அம்முகத்தில் தென்னிந்தியா தகுதிவாய்ந்த சிறு நெற்றி போன்றது. சிறப்பு மிக்க திராவிடநாடு அந்நெற்றியிலிட்ட பொட்டுப்போன்றது. அப்பொட்டின் நல்மணம் போல உலகத்துக்கு இன்பம் கொடுத்து எல்லாத் திசைகளிலும் புகழ் பரப்பும் பெருமைமிக்க தமிழன்னையாகிய தெய்வமே!

இது தமிழன்னை வாழ்த்து.

லே. மூ. சந்திரசேகர்,
புதுக்கோட்டை.

(அ) பண்பு - மரபு - இவற்றிற்குள் வேற்றுமை யாது? விளக்கம் கூறி உதாரணம் தருக.

(ஆ) சிலப்பதிகாரம் 'மறுபிறப்பு' உண்டென்பதாகக் கூறுகிறதே, இதைப் பற்றித் தங்கள் கருத்து யாது?

(இ) பண்டைத்தமிழகத்தில் 'திராவிடம்' என்ற அமைப்பின்கீழ் ஆட்சி நிலவியதா? சான்றுடன் விளக்கம் தருக.

(அ) பண்பு, மரபு இரண்டும் வழிவழியாகக் குடும்பத்திலோ, இனத்திலோ, சமுதாயத்திலோ வருவது. இவற்றுள் மரபு பெரும்பாலும் உடல், செயல், சொல், ஆகிய புறவகை சார்ந்தது. அத்துடன் முற்றிலும் இயல்பாக, ஆனல் ஒரு குழுவுக்கே சிறப்பாக வருவது. பண்பு என்பது உள்ளம், செயல் வகை, சொற்பொருள் ஆகிய அகவகை சார்ந்தது. தவிர, அது வழிவழிப் பயிற்சியாலும், அறிவுடையோர் வழிகாட்ட அறிந்தும், அறியாமலும் நீடித்துப் பின்பற்றப்பட்டும் வருவதாகும்.

மரபுக்கு வணக்கமுறை, உண்ணும் உணவு வரிசை, உடைமுறை ஆகியவற்றையும், மொழியில் காக்கை கரைந்தது; கோழி கூவிற்று; தென்னம்பிள்ளை, மாங்கன்று, சிங்கக்குருளை முதலிய சிறப்பு வழக்குகளையும் கூறலாம்.

பண்புக்குத் தமிழர் அன்படிப் படையான வீரம், பெண்ணின் ஊடல் உரிமை, ஆணின் மடலேறும் உரிமை ஆகியவற்றையும், மொழியில் போதல் வருதல்; கொடுத்தல். தருதல், ஈதல் ஆகியவற்றின் வேறுபாடுகளையும் கூறலாம். தமிழுக்கே சிறப்பான காய்கனி வேறுபாடு முதலியன மரபுக்கு மற்றும் சான்று மலையாளத்தில்கூட மாம்பழத்தை பழுத்த மாங்காய் என்றும் மாங்காயை பச்சை மாங்காய் என்றும் கூறுவர். இது மலையாள மரபு.

(ஆ) சிலப்பதிகாரமும் மணிமேகலையும் இணைந்து நண்பர்களால் தொடர்புடைய கதைகளைப் பற்றி எழுதப்பட்டவை. மறு பிறப்புக் கொள்கை கிட்டத்தட்ட இந்திய சமயங்கள் எல்லாவற்றிற்குமே பொது. ஆனல், சமண சமயத்துக்கும் இன்னும் சிறப்பாகப் புத்த சமயத்துக்கும் தனி உரிமையுடையதாகும். தமிழில் மட்டுமன்றி பாளி, பாகதம், சமஸ்கிருதம் ஆகிய மொழிகளிலும் புத்தரும் சமணரும் மறுபிறப்புக் கொள்கையை வலியுறுத்துவதற்கென்றே புதிய கதைகளும் எழுதினர். பழைய கதையிலும் புதிய மறுபிறப்புச் செய்திகளை இணைத்தனர். மணிமேகலை ஆசிரியர் இவ்வாறு மணிமேகலை, உதயகுமாரன், மாதவி, சுதமதி ஆகியோர்களின் முற்பிறப்புப் பற்றிக் கதைகள் கட்டுகிறார். சிலப்பதிகார ஆசிரியரும் இதைப் பின்பற்றுகிறார். அவர் சமணசமயத்தவர் என்று கூறப்படுகிறார். மேலும் கண்ணகி குடும்பம் சமண சமயமும் மாதவி குடும்பம் புத்த சமயமும் சார்ந்தவை.

தமிழர்களிடையே சங்க காலத்தில் மறுபிறப்புக்கொள்கை இருந்தது உண்டு. ஆனல் மறுபிறப்புக் கொள்கை மட்டுமன்றி வானகம்-நரகம், கடவுள் எல்லாவற்றையும் மறுத்தவர்களும் தொன்று தொட்டே உண்டு. உயிர் என்ற ஒன்று உண்டு என்பதை மறுத்தவர்கூட உண்டு.

திருவள்ளுவர் குறிப்புக்களால் தலைமுறைகளே பிறப்புக்களாக அறிஞர்களால் சித்தரிக்கப்பட்டது என்று கருதலாம். திருவள்ளுவர் நாத்திகருக்கும் மனநிறைவளிக்கும் ஆத்திக அறிஞர்.

(இ) சங்ககாலத் தமிழகத்தில் மூவரசரும் ஆண்டனர், குறுநில மன்னர் அல்லது வேளிரும் ஆண்டனர். அவ்வக்காலம் மூவரசருள் ஒருவர் பண்டைத்தமிழகம் (மலையாள கன்னட நாட்டுப் பகுதிகள் உட்பட்ட தற்போதைய சென்னை மாகாணம்) முழுவதும் அவ்வப்போது ஆண்டதுண்டு. ஒரொரு காலத்தில் தென்னாடு முழுவதும் அல்லது கிட்டத்தட்ட இந்தியா முழுவதும், சில சமயம் பர்மா, மலாயா, இந்தோசீனு முதலிய கடல்கடந்த நாடுகளை உட்படுத்தியும் ஆண்டதுண்டு.

அரசர் பெயரளவிலேயே உரிமை பெற்றனர். அரசருக்கு அரசர் போர் நிகழ்ந்த காலத்திலும் நிலவரப்படை (STANDING ARMY) வீரர் மட்டுமே போரில் ஈடுபட்டனர். மக்கள் வாழ்வு இதனல் சிறிதும் பாதிக்கப்படவில்லை: ஏனென்றால் நிலவர ஆட்சிமுறை குடியாட்சி அடிப்படையாக நாட்டாண்மை, நகராண்மை, ஊராண்மை முறைகளில் நடத்தப்பட்டது. மூவரசர் நாடுகளும் கோட்டங்கள் (ஜில்லாக்கள்) கூற்றங்கள் (தாலுகாக்கள்) வளநாடுகள் (வட்டங்கள்) நாடுகள் (பேரூர் சூழ்ந்த சிற்றூர்க்குழு) ஆகியவையாக வகுக்கப்பட்டிருந்தன. குடும்பத்துக்கொரு மொழி உரிமை (வோட்டு) இருந்தது. குட்டங்கள் (நாட்டாண்மை மன்றம்) மொழி எண்ணிக்கையால் குறிக்கப்பட்டன. இவற்றிற்கான சான்றுகள் தொண்டைமண்டலப் பட்டயம் முதலிய பட்டயங்களிலும் பிற கல்வெட்டுக்களிலும் இலக்கிய நூல்களிலும் உண்டு.

மணிவண்ணன், திருவாரூர்

1. 'பின்பற்றுதல்' என்பதற்கு என்ன பொருள்? இந்த வார்த்தையை எப்பொழுது உபயோகிக்க வேண்டும்? விளக்கம் கூறவும்.

2. தமிழகத்தில் 'மது' அருந்துவது எப்பொழுது துவங்கிற்று? அவர்கள் அருந்திய 'மதுவகைகள்' என்ன?

3. தமிழகத்தில்ஆரியர் நுழைவு எப்பொழுது நடந்தது? அவர்களுக்கு 'பார்ப்பனர்' என்று பெயர் வரக் காரணம் யாது?

1. ஒருவர் நோக்கத்தையோ கொள்கையையோ மேற்கொள்ளும் போது 'பின்பற்றுதல்' என்ற சொல்லை வழங்கலாம். சென்ற வழியில் செல்லுதல் என்பதுஅதன் பொருள்.

2. மது அருந்துவது எப்போது தொடங்கிற்று என்று கூறமுடியாது. சங்ககாலத்தில் மன்னனும் மக்களும் பலவகை ஊனுடன் மதுவும் அருந்தினர் என்று அறிகிறோம். இவற்றை விலக்கிய ஒரு சிலரும் இருந்தனர், தென்னை, பனை ஆகியவற்றிலிருந்து எடுத்த கள்ளை ஏழைகள் அருந்தினர். செல்வர்கள் அரிசியிலிருந்து தாதகிப் பூவும் பிறமணப் பொருள்களும் ஊட்டப்பட்ட உயர் குடிவகையை அருந்தினர். மன்னரும் உச்சநிலைச் செல்வரும் கிரேக்கர்களால் புட்டியில் அடைத்துக்கொண்டுவரப்பட்ட இனிய மணமுள்ள குளிர்ந்த பழவகை மதுவை அருந்தினர். இது தொலை நாட்டு இறக்குமதியானதால் மிக விலை ஏறியதாயிருந்தது.

3. தமிழகத்திலே ஆரியர் நுழைவு சங்க காலத்திலேயே தொடங்கிற்று. அவர்களைக் குடியேற்றிய முதல் அரசன் என்று கூறத்தக்கவன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி. மற்ற அரசர்களும் யாகம் செய்தும் ஆரியப் பார்ப்பனர்க்கு மானியங்கள் விட்டுக் குடியேற்றியும் வந்தனர். இக்குடியேற்றங்கள் சதுர்வேதிமங்கலம் என்று குறிக்கப்பட்டன. மூவரசர் காலமுதல் நாயக்கமன்னர் காலம் வரை இக்குடியேற்றங்கள் தொடர்ந்து நடந்துவந்தன

தமிழரிடையே திணைச்சார்பான குலங்கள் உண்டு. அவற்றில் மருத நிலத்துக்குரிய வேளாளரே பெரும்பான்மையான நாட்டுமக்கள். அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் இந்த வேளாண்மக்களின் உட்பிரிவுகளான வகுப்புக்களே, தமிழ் அந்தணர்களும் அவர்களுள் ஒரு பிரிவினரான பார்ப்பனரும் அறிவரும் கணிகரும் இருந்தனர், அந்தணர் மக்கட் சேவையில் ஈடுபட்ட அருளாளர்கள். பார்ப்பனர் கோயில் வழிபாடு, விழாக்கள் நடத்தியவர். அறிவரும் கணிகரும் நாள் பார்த்தல், மழை, புயல் பற்றி முன்னறிவித்தல், காலம் கணித்தல் அதாவது நாழிகை வட்டில் (பண்டைக்கால மணல் கடிகாரம்) கணிப்பு ஆகியவற்றைச் செய்துவந்தனர்.

வெள்ளைக்கார குருமாரைதமிழர் வெள்ளை ஐயர் என்று கூறியது போல அயல் மதகுருமாராக வந்த ஆரியரையும் தமிழர் முதலில் ஆரியப் பார்ப்பனர் என்று கூறினர் தமிழ்ப் பார்ப்பனர் வகுப்பு படிப்படியாக அரசர் ஆதரவு இல்லாமல் மதிப்புக் குறைந்தபின் ஆரியப் பார்ப்பனரே அம்மதிப்பைப் பெற்று பார்ப்பனர் ஆயினர். ஆனல் இன்றும் தமிழ்ப் பார்ப்பனர் இழிவு பார்ப்பனர் என்ற தனித்தமிழ்ச் சொல்லிலும் ஆரியப்பார்ப்பனரின் மதிப்பு பிராமணர் என்ற குரியச் சொல்லிலும் வழக்கிலிருந்தே வருகிறது - பிச்சை, பிக்ஷை என்ற வேற்றுமை போல.

அன்பழகன் அறிவிப்பு

◉

'சீதையின் காதல்' என்னும் ஏட்டை, என் பெயரில் மதுரை "அறிவுப் பண்ணை" வெளியிட்டுள்ளதை அண்மையில் கண்டு துணுக்குற்றேன். அந்த ஏட்டை வெளியிட என்னிடம் யாரும் உரிமை கேட்காததோடு வெளியிட்டதையும் இதுவரை தெரிவிக்கவுமில்லை. நானும், எவருக்கும் அதை வெளியிட இசைவு அளிக்கவுமில்லை.

நான் ஆற்றியதொரு சொற்பொழிவை வெளியிடும் வகையில் அமைந்துள்ள இந்த ஏடு, சொல், தொடர், கருத்து, விளக்கம், முடிபு ஆகிய அனைத்தானும் தவறுபட்டும், பிழை மலிந்தும், குற்றங்குறை நிறைந்தும், தரங்கெட்டும், முறையற்றும், உண்மைக்கு மாருகவும், இழிசுவை பயப்பதாகவும் காணப்படுகின்றது. என் சொற்பொழிவைச் சிதைத்தும் கெடுத்தும் சீரழித்துச் சிறுமை செய்துள்ளது. அதில் காணப்படும் கருத்துக்கள் பலவும் என்னுடைய தகுதிக்கே இழுக்குத் தேடுவதோடு, மானக் குறைவும் விளைவிப்பன.

பொது மக்கள் தொடர்பு கொண்ட, என் பெயரால் இந்த ஏட்டை வெளியிட்டுப் பொது மக்களை ஏமாற்றும் வெறுப்பும் கொள்ளச் செய்வது மிக்க வேதனையளிப்பதாகும். இதனை வெளியிட்டவர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுப்பதற்கான முயற்சியில் ஈடுபட்டுள்ளேன். பொதுமக்கள் இந்த ஏட்டை என்னுடையதாகக் கொள்ள வேண்டாமென்றும், இதன் விற்பனைக்குத் துணைசெய்ய வேண்டாமென்றும் கேட்டுக்கொள்ளுகிறேன்.

இங்ஙனம்,
க. அன்பழகன்.

ஆசிரியத் தோழருக்கு...

அன்புடையீர்,

வணக்கம். தென்னாடு புயலின் கொடுமையால் பாதிக்கப்பட்டு வேதனைக் குள்ளாகியிருக்கும்போது, புண்ணில் வேல் பாய்ச்சியதுபோல ஒரு கிழவர் 'விஷமம்' செய்து கொண்டேவருகிறார். சென்ற வாரத் தென்றலில்'சாவும்வாழ்வும்'என்ற தலைப்பில் ஒரு கட்டுரை வெளியாகி இருந்தது, அதைத் தொடர்ந்து மற்றுமொரு கருத்தைக் கூற வேண்டியவனாயிருக்கிறேன். ஆச்சாரியார் போன வாரம், 'புயல் ஆண்டவன் செயல்' என்றார். இந்த வாரமும் சில விஷக்கருத்துக்களைத் தூவியிருக்கிறார்.

நாட்டில் நாஸ்தீகம் பரவி வருவதற்கு மேலை நாடுகளிலெல்லாம் உண்மையானகாரணங்களைச்சொல்லி வருகிறார்கள். அறிவின் முதிர்ச்சி நாஸ்தீகத்தின் தொட்டில் என்று சொல்லக் கூடிய அளவிற்கு நாடு முன்னேறிக் கொண்டு வருகிறது. ஆனால் அந்த நாஸ்தீகம் 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்ற புனிதத் தத்துவம் கொண்டது.

ஆச்சாரியார் எதை நாஸ்தீகம் என்று கொண்டிருக்கிறாரோதெரியவில்லை. கெட்ட ஆசைகளினால்தான் நாஸ்தீகம் பறக்கிறது என்று சொல்லியிருக்கிறார் இந்த வாரம் ஒரு கூட்டத்தில். நாம் கூறும் 'நாஸ்தீகம்' ஆலயத்தைப் பற்றிய பிரச்சினை; ஆலயத்துக் கற்சிலையும் சம்பந்தப்பட்ட தகராறு. ஆனால் ஆச்சாரியார் அப்படிச் சொல்லவில்லை—அப்படிக் கருதவுமில்லை. கடவுள் என்பவர் எப்போதும் மக்கள் முன்புதோன்றுவதற்கு 'ரெடி'யாக இருப்பதாகவும் ஆனால் பொது மக்கள்தான் புரியாமல் கெட்ட ஆசைகளை வரவழைத்துக்கொண்டு நாஸ்தீக வாதம் பேசுவதாகவும் ஆச்சாரியார் குறிப்பிட்டிருக்கிறார். மக்களைக் காப்பாற்றுவதற்கே ஆண்டவன் என்ற மூடக் கொள்கை வேரூன்றி விட்ட காரணத்தினால்தான், கஷ்டம் நேரிடும் போது மனிதன் ஆண்டவனைத் திட்டுகிறான். இது மனித இயல்பு. ஆனால் அந்த ஆண்டவனின் அவதாரங்களாக வடிவெடுத்திருக்கும் சிலைகளுக்கும், பொம்மைகளுக்கும் ஆபத்து வந்திருப்பதைப் பற்றி ஆச்சாரியார் என்ன சொல்கிறாரோ தெரியவில்லை. மனிதன்தான் கெட்ட ஆசைகளால் ஆண்டவனைத் திட்டுகிறானென்றால், இந்தப்புயலுக்கும், மழைக்கும், ஆண்டவனுக்கும் என்ன தகராறோ தெரியவில்லையே! ஏனென்றால் கோயில்களெல்லாம் புழுதி மேடாகி இருக்கின்றன; மகுதிகள், மாதோ கோயில்கள் தவிடு பொடியாகிப் போயிருக்கின்றன! இந்த நிகழ்ச்சிகளெல்லாம் எந்த ஆசையால் ஏற்பட்டனவோ? தன்னைத் தானே அழித்துக் கொள்ளும் ஆண்டவன் நல்ல ஆண்டவனய்யா!

கெட்ட ஆசைகளால் நாஸ்தீகம் பிறக்கிறதாமே நாஸ்தீகம்! ஆச்சாரியாருக்குப் பிறந்ததே, கூடாத ஆசைகளெல்லாம், அதைக் காட்டிலுமா நம்மிடம் கெட்ட ஆசை பிறந்துவிட்டது!

அன்புள்ள
"பொன் மலர்"
மதுரை.

தோழர்களுக்கு!

◉

"தென்றல் திரை" குறித்த காலத்திற்கு வெளிவரும்படி செய்ய பல தடவை முயற்சிகள் செய்தும், சற்று தாமதத்துடனேயே வெளி வந்து கொண்டிருக்கிறது. ஆதலால், இந்தத் தடவை ஓர் நல்ல முடிவு செய்து நிர்வாகம் தனித் தனியே பிரிக்கப்பட்டு, இதுவரை 'தென்றல்கன்சர்ன்ஸ்'லில்கூட்டாக இருந்து வந்த தோழர் P. P. பத்மநாபன் வசம் "தென்றல் திரை" சம்பந்தப்பட்ட முழுப் பொறுப்பும் ஒப்புவிக்கப்பட்டுள்ளது.

ஆதலால், ஜனவரி மாதம்முதல் "தென்றல் திரை" குறித்த காலத்தில் புதிய அம்சங்களுடன் வெளி வரும் என்பதை உறுதியுடன் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

ஏஜெண்ட் தோழர்கள் "தென்றல் திரை" பாக்கித் தொகை முழுவதும் உடன் அனுப்பிவைத்து முழு ஒத்துழைப்பும் கொடுக்குமாறு கோருகிறேன்.

"தென்றல்-திரை" சம்பந்தப்பட்ட கடிதப் போக்கு வரத்து மற்றைய அனைத்தும், நிர்வாகி "தென்றல்-திரை" 'மவுண்ட்ரோட்' சென்னை-6. என்ற விலாசமிட்டு எழுதுமாறு கோருகிறேன்.

ஏஜெண்ட் தோழர்கள் "தென்றல்" பாக்கித் தொகை முழுவதும் உடன் அனுப்பி வைத்து முழு ஒத்துழைப்பும் கொடுக்குமாறு கோருகிறேன்.

"தென்றல்" சம்பந்தப்பட்ட கடிதப் போக்கு வரத்து மற்றைய அனைத்தும், நிர்வாகி, "தென்றல்" மவுண்ட்ரோட், சென்னை 6. என்ற விலாசமிட்டு எழுதுமாறு கோருகிறேன்.

வணக்கம்.
அன்புள்ள,
கண்ணதாசன்.

(2 ம் பக்கத் தொடர்ச்சி)

யையும் கூறுகிறார்கள். துட்டகை முனுவுக்குப் பத்து வயதாயிருக்கும் போது, ஒருநாள் அவன் தன் அரண்மனையின் ஒரு மூலையில் முடக்கிக்கொண்டு படுத்திருந்தானும். அவன் தாய் வந்து, "இவ்வளவு இடமிருக்கும்போது ஏனடா முடக்கிக்கொண்டிருக்கிறாய்"? என்று கேட்டாளாம்.

"என்ன செய்வது? ஒருபக்கம் கடல் நெருக்குகிறது; மற்றொரு பக்கம் தமிழன் நெருக்குகிறான் எப்படியம்மா நிம்மதியாகத் தூங்க முடியும்?"! என்றானும் துட்டகைமுனு. பட்டத்திற்கு வந்ததும் தமிழர்களைப் பழிதீர்த்துக்கொண்டானும். அவனால் கொல்லப்பட்டதாகக் கூறப்படும் எல்லாளன் என்ற தமிழ் மன்னன்தான் வள்ளுவர் கதையோடு தொடர்பு காட்டப்படும்ஏலேலசிங்கர்என்று சிலர்கூறுகிறார்கள். இது எவ்வளவு தூரம் உண்மையோ நமக்குத் தெரியாது.

இலங்கையைக் கட்டியாண்டதாகச் சொல்லப்படும் அந்த எல்லாளன்- ஏழாலன் என்ற பெயரில் அபிதான சிந்தாமணியில் காணக் கிடக்கிறான். அந்த நாளில் எல்லாளன் இலங்கையிலிருந்த புத்தக் கோயில்களை இடித்தான் எனக் கூறப்படும் கதையினால்தான் இன்றைக்குப்புத்தப்பிக்ஷுக்களுக்கு ஆத்திரம் வந்திருக்கிறதோ என்னவோ நமக்குத் தெரியாது.

சிங்களவர்கள் மகா வம்சத்துச் செய்திதான் இலங்கையின் முழு வரலாறு என்று நம்புகிறார்கள். காடுவெட்டி கழனிநிலம் திருத்தி வீடு கட்டிக் கொடுத்ததிலிருந்து அரசியல் அமைத்துக் கொடுத்தது வரை இலங்கை வரலாறு தமிழரைத்தான் சுட்டிக்காட்டுகிறது. ஆனால் சிங்களவர்கள் அதை ஒப்புக் கொள்ள மறுக்கிறார்கள். அப்படி ஒரு வரலாறு இல்லையென்று அல்ல, இருக்கக்கூடாது என்று!

பயங்கரமான அந்தச் சுவரொட்டிகளைப் பார்த்துவிட்டு பதுளையில் வசிக்கும் தமிழர்களைப் பார்த்த போது என் நெஞ்சம் கலங்கிற்று. தமிழர்கள் அங்கே சத்தம் போட்டுப் பேசவே பயப்படுகிறார்கள்.

உலகத்துக்கு நாகரிகம் தந்த இனம் என்று பாராட்டப்படுகிற திராவிட இனம் உலகின் எந்தப் பகுதியிலேயும் வாழமுடியாது இனி, சொந்த நாடு உட்பட. எல்லா திராவிடர்களும் ஒன்று சேர்ந்து புரட்சிகரமான நடவடிக்கை எடுத்து திராவிட நாட்டைத் தனி நாடாக ஆக்கினால்தான் உலகின் மற்ற பகுதிகள் நமக்குப் பயப்படும். இந்த அறிவு, இங்கே இருந்துகொண்டு காட்டிக்கொடுக்கும் கூட்டத்தினருக்கும் வரவேண்டும். அப்படி வந்துவிட்டால் - நாடு பிரிந்துவிட்டால் கடல்கடந்து வாழும் தமிழர்களின் நெஞ்சம் கலங்கரை கண்டது போல் மகிழும். இந்தக் கருத்தைத் தான் இலங்கையில் நான் சந்தித்த எல்லாக் கட்சித் தலைவர்களும் சொன்னார்கள்.

பதுளையில் அன்று மாலை நடுக்கும் குளிரில் ஒரு பழைய மண்டபத்தில் கூட்டம் நடந்தது. புதிய மண்டபங்கள் சிங்களவர்கள் கையிலாம். கொடுக்க மறுத்துவிட்டார்களாம். அந்தக் கூட்டத்திற்கு வந்திருந்த தமிழர்களின் முகங்களைப் பார்க்கவே எனக்குச் சங்கடமாயிருந்தது.

— அடுத்த இதழில் முடியும் —

— **கண்ணதாசன்**

தென்றல் இலக்கியப் போட்டி பாராட்டு விழா

8-1-56 ஞாயிறன்று
காரைக்குடியில்
கலைஞர் மு. கருணாநிதி
கலந்து கொள்வார்.

வெண்பாப் போட்டி

21. பெண்ணிற்கும் ஏதேனும் ஒரு பொருளிற்கும் சிலேடை

வெண்பாப் போட்டி 21-ன் பரிசுபெற்ற வெண்பாவையும், ஏனைய தகுதியுடைய வெண்பாக்கள் சிலவற்றையும் இந்த இதழில் வெளியிட்டுள்ளோம். மீதமுள்ளவை அடுத்த இதழில் வெளியாகும்.

மிக்கபேறை உள்ளமையால் மேற்பாரந் தாங்குமால்
மிக்கபுகழ் நன்மணியை ஈனுமால்-மக்களினம்
நண்ணுந் துயர்நீக்கி நல்லின்பம் சேர்க்குமால்
பெண்ணும் புவியும் நிகர்.

—சௌ. ஜோதிராம், மதுரை.

★

அசையுறுப்பும் சீரும் அடியும் தளையும்
இசைந்து அணிசிறப்பாய் ஏந்தித்-திசைஎங்கும்
பேரின்பம் தந்துவரும் பெற்றியதால் வையகமே!
காரிகையும் காரிகையாம் காண்.

—தொல்காப்பியன், அகரப்பேட்டை.

★

முத்தங் கொடுப்பதுவால் மோது கலந்தாங்கிச்
சித்தங் கெடுப்பதுவால் சேர்வலையால் இத்தலத்தில்
பண்ணுக்கும் தீஞ்சொல் பணியொக்கும் தண்ணுக்குப்
பெண்ணுக்கும் வண்ணக் கடல்.

—சி. சுந்தரேசன், அண்ணாமலைநகர்.

★

மேற்பார மும்தாங்கும் மேல்விழுந் தம்புராணும்
ஆர்ப்பாட்டம் போடும் அகமகிழ்வால்-மேற்கூறின்
காலை வளைத்துநிற்கும் காலணியும் பூண்டிருக்கும்
நீள்கழுதை பெண்ணுக்கு நேர்.

—சாத. இறையரையன், பாகனேரி

★

சூலுற்றாய் மாவரைத்தோள் சேர்ந்து மகிழ்ந்ததால்
பாலூட்டி சேயின் பசிதீர்ப்பாய்-மேலுங்கேள்
மேகலைவிற் பூணாரம் மின்னலிடை கொண்டிடுதல்
மேகமும் பெண்டிரு மால்.

—அ. வீ. பெ. இளங்கோவன், ஊரல்வாய்மொழி.

★

"மாண்ட முகிழ்களுடன் மாமலரும் காட்சிதரும்
நீண்டகன்ற நற்கயல்கள் நின்றுலவும்-தீண்டியவர்
தண்ணென்னும் இன்பமே தாமடைவர் ஆகையினால்
பெண்ணெனவே ஊருணியைப் பேண்."

—இராம. மாணிக்கம், மேலைச்சிவபுரி.

★

குண்டலமும் மேகலையும் கைக்குவளை யாப்பியும்
தண்சிலம்பும் தன்னகத்தே கொண்டொளிர்ந்து-பண்டுகலை
கண்டுவந் தன்பர்க்குக் கொள்ளை அமுதீயும்
தண்டமிழும் பெண்ணுமெனத் தேர்.

—காப்பியனூர், வேலூர்.

★

வட்ட முகமுளதால்; வண்ணம் மிகவுளதால்;
கொட்டும் ஒளிதண்மை கூடலால்;-இட்டமாய்
கண்டவுடன் நெஞ்சினைக் கவ்வுந் திறனுளதால்;
பெண்ணை நிலவெனப் பேசு.

—புதுமைச்சித்தன், ஆல்பேட்டை.

★

எத்தனை நேரம் இருந்தாலும் சற்றேனும்
சித்தம் சலியாதால், தித்திக்கப்-புத்திமிகப்
பண்ணுவதால், பாதம் இரண்டுளதால், பத்தினிப்
பெண்ணுக்கு நேர்குறளாம் பேசு.

—பா. ஜ. காசிநாதன், புதுவை.

★

கொம்பிரண்டு கொண்டாலும் கோபித்து முட்டாது;
செம்புநிறை பாலீந்து சோர்வகற்றும்-தம்பின்னை
ஆண்கன் அளித்த அடக்கியாளும் சின்னமாம்
'நானென்'ன்று பெற்றிருக்கும் நன்கு.

சோமு. தமிழ்ப்பிரியன், பாகனேரி.

★

மெய்யும் உயிரும் விரவியதால், காலத்தாற்
பொய்யாப் புலவர்கள் பாடியதால்-ஐயமிலா
நற்சிறப்பால், செம்மையால், நந்தமிழுக் கொப்பாவாள்
கற்புடைய மங்கையவள் காண்.

—சு. சந்தானக்கண்ணன், மதுரை.

★

பல்லணிகள் தானுடையாள் பார்ப்போர் கவர்நடையாள்
சொல்லெல்லாம் தேனுடையாள் சொற்செல்வர்-நல்ல
நினைப்பினிலே நின்றிடுவாள் நேர்இல்பொற் பாவை
நினைத்தாலும் இன்புறும் நெஞ்சு.

—ந. வடிவேலு, தாரமங்கலம்.

★

மணத்திற்கு நன்றும்; மனைவிளக்க மாக்கும்;
உணற்குச் சுவையுடனே யூட்டும்-அணிசெய்யும்
தன்னேர் குரும்பையினைத் தான்கொள்ளும் இவ்வுலகில்
தென்னைதான் பெண்ணும் தெளி.

—ச. வைத்தியநாதன், சிதம்பரம்.

★

காய்ச்சலால் வாடும் கடைத்தெரு வில்விரித்தால்
தூய மணங்கெடும் தம்மீது-மெய்க்காதல்
கொண்டார்க்குப் போதையூட்டும் பின்னும் புகைத்தூட்டும்
பெண்ணும் புகையிலையாம் பார்!

—து. பெருமாள், சென்னை-11.

★

என்னுங்கால், ஒன்றி இதயமுறத் துய்க்குங்கால்,
பண்ணொடு தேனொழுகப் பாடுங்கால்,-கண்ணுகின்ற
இன்பத்தால், வாழ்வுக்கு இவ்வுலகிற் கண்ணான,
செந்தமிழும் பெண்ணுமிணை செப்பு.

—கா. ச. மூர்த்தி, பழூர்.

★

களிதடத்து வம்பார்க்கு மீராம்ப லோர்கோட்
டளிக்காத்தாற் கண்கெகிழப் பூத்து-தளிர்க்கை
மதுமறைக்குஞ் சோலை முகமா மாத்திற்
குயிற்பெண்ணும் கூவத்தான் கேள்!

—இளசைமணாளன், திருவையாறு

★

காதலன் நல்வருகை கண்டு களிப்பெய்தி
ஏதிலான் தீவரவால் ஏங்குதலால்-மீதலத்தில்
செந்தா மரைமலரும் செங்கை வளையாரும்
சந்ததமும் ஒன்றென்றே சாற்று.

—வ. பஞ்சநாதன், பழூர்.

★

இன்பம் மிகத்தந்து ஈடில்லா வள்ளலாய்த்
துன்பம் துடைத்துத் தனித்தியங்கி-மென்மையாய்ப்
பொங்கும் எழில்கொழித்துப் பற்கலைகள் சேர்த்தலினால்
நங்கை தமிழுக்கு நேர்.

—ஏ. சிவா, வேலூர்.

★

மங்கலமாம் வாழ்மனையில் மேவும் மனங்கண்டோர்
நன்கலமே பெற்றுவப்பர் ஞாலத்தில்-மென்மையுறும்
காணின் மலரும்; கருத்தீர்க்கும் காரிகையும்
நீணிலத்திற் பூவுமினை நேர்.

—வ. ம. அரங்கநாதன், சென்னை-7.

★

வெள்ளத் துதித்தாள்; வெற்றிமலைத் தோள்சேர்ந்தாள்;
கள்ளச் சிலிர்ப்பால் கருவுற்றாள்-அள்ளித்தாய்க்
கண்ணீரை யுண்ணும் கடலே புவிக்குலமே
வெண்முகிலோ பெண்ணோ விளம்பு.

—என். மெய்தீன், ('தேனீ') ஆயப்பாடி.

★

கோடிருக்கும்; நற்பொறுமை கொள்ளும்; பலபூக்கள்
சூடி யிருக்கும் துணியேற்கும்-நாடி
வருமவரைக் காக்கும்; வளமாக்கும்; இங்கே
பெருமலையோ(டு) ஆகும்பார் பெண்.

—வித்துவான், ச. சுந்தரேசன், கோனூர்.

◉ பரிசு பெற்ற வெண்பா—பரிசு, ஓராண்டு 'தென்றல்' சந்தா.

ஆசிரியர், அச்சிடுபவர், வெளியிடுபவர் கண்ணதாசன், ஏ. எம். எஸ். அச்சகம், 2-127, மவுண்ட் ரோடு, சென்னை-6.